Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

THURSDAY, JANUARY 19, 2023

வியாழக்கிழமை ஜனவரி 19, 2023 | ஒளி: 08 கதிர் 190 | பக்கம்:08 | வடக்கு,கிழக்கு | Free




# மாணவர்களுக்கு மாற்றுவழி

தேசிய அடையாள அட்டைகளை அச்சிடுவதற்கு பயன்படுத்தப்படும் அட்டைகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும், சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு தேசிய அடையாள அட்டைக்குப் பதிலாக திணைக்களத்தினால் சான்றளிக்கப்பட்ட ஆவணத்தை வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக ஆட்பதிவுத் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் பிரதீப் சபுதந்திரி தெரிவித்துள்ளார். இவ்வாறு வழங்கப்படும் ஆவணம் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் வரை செல்லுபடியாகும் வகையில் தயாரிக்கப்படும் எனவும் ஆணையாளர் நாயகம் குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

# மாணவியை பலியெடுத்த காதலனுக்கு விளக்கமறியல்



**24 வயதான சந்தேகநபரை எதிர்வரும் 30ஆம் திகதி வரையிலும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.**

கொழும்பு பல்கலைக்கழகத்தின் 3ஆம் வருட மாணவியொருவர், செவ்வாய்க்கிழமை (17) நண்பகல், அவருடைய காதலன் என்று கூறப்படும் நபரால் மேற்கொள்ளப்பட்ட கத்திக் குத்துக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார். கொழும்பு - 07, குதிரைப் பந்தய திடலில் இரத்த வெள்ளத்தில் கிடந்த நிலையில் குறுந்துவத்த பொலிஸாரினால் சடலம், கண்டெடுக்கப்பட்டது. உயிரிழந்தவர் ஹோமாகம பிரதேசத்தைச் சேர்ந்த 24 வயதான மாணவி என்பது குறிப்பிடத்தக்கது.

உயிரிழந்த மாணவியின் கழுத்தில் ஆழமான வெட்டுக் காயங்கள் காணப்பட்டன. கொலை செய்தாகக் கூறப்படும் சந்தேகநபரும் அதே பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் மாணவன் ஆவார். அவர், கொலன்னாவை, வெல்லம்பிட்டி பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

தொடர்ச்சி P2

சின்னத்தேர்தல்

# உரிய நேரத்தில் நடத்தப்படும்

**தேர்தல்கள் ஆணைக்குழு உயர் நீதிமன்றத்தில் தெரிவிப்பு**

உள்ளூராட்சி மன்ற தேர்தல்கள் சட்டம் மற்றும் உரிய விதிமுறைகளுக்கு அமைய, வேட்புமனு தாக்கலின் பின்னர் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் உரிய நேரத்தில் நடத்தப்படும் என தேர்தல்கள் ஆணைக்குழு உயர் நீதிமன்றத்துக்கு புதன்கிழமை (18) அறிவித்துள்ளது.

உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கு அவசியமான நிதியை வழங்க முடியாது என திறைசேரி இதுவரை அறிவிக்கவில்லை எனவும், தேர்தல்கள் ஆணைக்குழு உயர் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பான வேட்புமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படுவது நேற்று (18) மு.ப. 8.30 மணிக்கு ஆரம்பமானதாகவும், ஜனவரி 21 நண்பகல் 12 மணிக்கு நிறைவு செய்யப்படும் எனவும் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் நீதிமன்றத்துக்கு தெரியப்படுத்தியுள்ளார்.

அத்துடன் வேட்புமனுக்கள் நிறைவடைந்த பின்னர் தேர்தல் சட்டத்திற்கு அமைவாக தேர்தலை நடத்த நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் அறிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2



# இந்திய பஸ்கள் 500 வருகின்றன

இலங்கைக்கு வழங்கப்பட்ட இந்திய கடன் வசதியின் கீழ் இலங்கை போக்குவரத்து சபைக்கு 500 பஸ்களை வழங்குவதற்கான நடவடிக்கைகளை எடுக்கவுள்ளதாக இந்திய அசோக் லேலண்ட் நிறுவனம் தெரிவித்துள்ளது. இதில், 75 பஸ்கள் ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ளன.

தொடர்ச்சி P2

# இலங்கைக்கு நாமே கை கொடுக்கிறோம்

**அமெரிக்காவுக்கு சீனா பதிலடி**

இலங்கைக்கும் சர்வதேச நாணய நிதியத்துக்கும் இடையிலான பேச்சுவார்த்தையை சீனா சீர்குலைப்பதாக கூறும் அமெரிக்காவின் குற்றச்சாட்டை தாம் நிராகரிப்பதாகவும், இவை ஆதாரமற்ற குற்றச்சாட்டு எனவும் சீன தூதரகம் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

# செந்திலின் இரண்டு காளைகளும் வென்றன



உலக புகழ்பெற்ற அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமானின் இரண்டு காளைகள் சீறிப்பாய்ந்து வெற்றிபெற்றன.

செந்தில் தொண்டமானின் சோழன் - 2 என்ற காளை சீறிப்பாய்ந்து அடக்க வந்த வீரர்களை தலைகீழாக பறக்கவிட்டு வெற்றிபெற்றது.

அதனையடுத்து விளையாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், செந்தில் தொண்டமானின் காளைகளுக்கு தங்க மோதிரம் பரிசாக வழங்கி வைத்தார்.

# சில தீர்ப்புகளினால் பலர் தண்டிக்கப்படலாம்

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்வம் தொடர்பான வழக்கில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராக வழங்கப்பட்ட தீர்ப்பு, போர்க் குற்றச்சாட்டுகள் தொடர்பில் கோட்டாபய ராஜபக்ஷ, மஹிந்த ராஜபக்ஷ மற்றும் சரத் பொன்சேகா உள்ளிட்ட இராணுவத்தினருக்கு உத்தரவிட்ட உயர் அதிகாரிகளுக்கு தண்டனை வழங்குவதற்கு முன்மாதிரியான தீர்ப்பாக இருக்கலாம் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி செயலாளரான தயாசிறி ஜயசேகர தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று (18) நடைபெற்ற புனர்வாழ்வு அலுவலக சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றிய முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா,

தொடர்ச்சி P2

உயர்தரப் பரீட்சைக்கு

# அனைத்து ஏற்பாடுகளும் தயார்

கல்விப் பொதுத்தார உயர்தரப் பரீட்சைக்கு அனைத்து ஏற்பாடுகளும் தயாராக உள்ளதாக பரீட்சை ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று (18) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனை தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்,

2022 கல்வியாண்டுக்கான , கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை எதிர்வரும் 23 ஆம் திகதி முதல் பெப்ரவரி 17 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

செல்லுபடியாகும் அடையாள அட்டை அல்லது அனுமதி அட்டை இல்லாவிட்டாலும் பரீட்சைக்கு தோற்ற முடியும் என பரீட்சைகள் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

அதுமட்டுமன்றி, 1911 என்ற அவசர தொலைபேசி இலக்கம், 0112 784 208, 0112 784 537, 0112 785 211 மற்றும் 0112 786 616 ஆகிய தொலைபேசி இலக்கங்கள் 24 மணிநேரமும் பரீட்சை பிரச்சினைகள் மற்றும் முறைகேடுகள் தொடர்பாகத் தெரிவிக்கும் வகையில் இயங்கி வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் காயம்

கொட்டாஞ்சேனையில் ஆறாவது ஒழுங்கையில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

நேற்று (18) பிற்பகல் 1.30 மணியளவில் இந்த துப்பாக்கிச் சூடு இடம்பெற்றுள்ளது என்று தெரிவித்த பொலிஸார்,

மோட்டார் சைக்கிளில் வந்த நபரொருவரே துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டுவிட்டு தப்பியோடியுள்ளார் என்றனர்.

காரொன்றில் இருந்த நிலையில், துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான நபர், கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.



# காங்கிரஸை கைவிட்டு கையுடன் சங்கமம்

■ நீலமேகம் பிரசாந்த்

அம்பகமுவ பிரதேச சபை உறுப்பினர் ஜோயல் மெல்கம் இலங்கை தொழிலாளர் காங்கிரஸில் இருந்து விலகி, ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியில் உத்தியோகபூர்வமாக இணைந்து கொண்டார். இ.தொ.காவில் இருந்தும் அனைத்து பொறுப்புகளில் இருந்தும் விலக்கப்பட்ட ஜோயல் மெல்கம், ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேனவையும், செயலாளர் தயாசிறி ஜயசேகரவையும் சந்தித்து தன்னுடைய முடிவை அறிவித்துள்ளார்.

அத்துடன், விரைவில் நடைபெறவிருக்கும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியில் போட்டியிட உள்ளதாகவும் அறிவித்துள்ளார்.

இந்த சந்திப்பின் போது, நுவரெலியா மாவட்டத்தில் பல அபிவிருத்தி வேலைத்திட்டங்களை துரித கதியில் முன்னெடுக்க ஒத்துழைப்பு தருவதாக மைத்திரிபால சிறிசேன உறுதியளித்ததாக, அம்பகமுவ பிரதேச சபை உறுப்பினர் ஜோயல் மெல்கம் தெரிவித்தார்.



# பூர்வக்குடி தலைவருக்கும் அழைப்பு

இலங்கையின் 75வது சுதந்திர தின நிகழ்வில் ஏனைய பூர்வக்குடிகளின் தலைவர்களுடன் கலந்துகொள்ளுமாறு, பிரதமர் தினேஷ் குணவர்தன நேற்று அழைப்பு விருத்திருந்தார். அதற்கமைய தாம் 75வது சுதந்திர தின நிகழ்வில் கலந்துக்கொள்ள உள்ளதாக பூர்வக்குடிகளின் தலைவர் ஊறுவரிகே வன்னியலெத்தோ தெரிவித்துள்ளார். ஊறுவரிகே வன்னியலெத்தே நேற்று பாராளுமன்றத்தில் பிரதமர் தினேஷ் குணவர்தனவை சந்தித்தார். சுதந்திர தின நிகழ்வில் கலந்துக்கொள்ளும் பூர்வக்குடிகளின் தலைவர்களுக்கு சகல வசதிகளும் செய்துக்கொடுக்கப்படும் என பிரதமர் இதன் போது அறிவித்துள்ளார்.

# புலிகளின் கைபொம்மை கனடா

■ பா.நிரோஸ்



முன்னாள் ஜனாதிபதிகளான மஹிந்தராஜபக்ஷ, கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோர் மீது பொருளாதாரத் தடையை கனடா விதித்துள்ளமைக்கு கடும் கண்டனங்களை தெரிவித்த முன்னாள் அமைச்சர் சரத் வீரசேகர, புலிகளின் கைபொம்மையாக கனடா செயற்படுவதாகவும் குற்றஞ்சுமத்தினார்.

தொடர்ச்சி P2



# தமிழ்க் கட்சிகளுக்கு பொன்சேகா அறிவுரை

■ பா.நிரோஸ்

13 ஆவது அரசியலமைப்பு திருத்தம் தொடர்பில் கதைத்து அரசியல் லாபம் தேடிக்கொள்ளவே ஜனாதிபதி முயற்சிக்கின்றார், இதில் சிக்கிவிட வேண்டாமென வடக்கு, கிழக்கு தமிழ் அரசியல் கட்சிகளை கேட்டுக்கொள்வதாக எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினரான முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று (18) நடைபெற்ற புனர்வாழ்வு அலுவலக சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

புனர்வாழ்வு பணியக சட்டமூலம்

# 17 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது

நீதி அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட புனர்வாழ்வு பணியக சட்டமூலம் 17 மேலதிக வாக்குகளினால் திருத்தங்களுடன் நிறைவேற்றப்பட்டது. புனர்வாழ்வு பணியக சட்டமூலம் நேற்று புதன்கிழமை நீதி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஸவினால் சபையில் சமர்ப்பிக்கப்பட்டு விவாதத்திற்கு எடுக்கப்பட்டது.

தொடர்ச்சி P2



# 70,000 குடும்பங்களுக்கு பால்மா

பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ள 70,000 குடும்பங்களுக்காக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் தலைமையில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள 'உணவு பாதுகாப்பு மற்றும் போஷாக்கு தொடர்பான தேசிய ஒன்றிணைந்த பொறிமுறை'

தொடர்ச்சி P2

# மைத்திரிக்காக பணம் திரட்டிய கலைஞர்

ஈஸ்டர் குண்டுத்தாக்குதல் வழக்கில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு விதிக்கப்பட்டுள்ள 10 கோடி ரூபாய் நட்டஈட்டு தொகையை செலுத்துவதற்காக, ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் ஆதரவாளரும், சிங்கள மொழிக் கலைஞருமான சுதத்த திலகசிறி கொழும்பு, கோட்டையில் உண்டியல் குலுக்கி பணம் சேகரித்துள்ளார்.

திரட்டப்பட்ட 1,810 ரூபாய் பணத்தை முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் அவர் கையளித்துள்ளார்.

நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட 10 கோடி ரூபாய் நட்டஈட்டை செலுத்தும் அளவுக்கு தன்னிடம் சொத்துக்கள் இல்லை எனவும், அதனால் பணத்தை தனது நண்பர்களிடம் பெற்றுக்கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதாகவும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பாராளுமன்றத்தில் தெரிவித்திருந்தார்.



தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# மாணவியை பலியெடுத்த காதலனுக்கு விளக்கமறியல்



சம்பவ இடத்தில் நீதவான் விசாரணை இடம்பெற்ற பின்னர், சடலம் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பிரேத அறைக்கு அனுப்பி வைக்கப்பட்டு, மேலதிக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. காதலன் என கூறப்படும் நபர்,

மூன்று மணிநேரத்துக்கு சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அவரை தடுத்துவைத்து விசாரணைக்கு உட்படுத்தி வந்த பொலிஸார், அவரை கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர். 24 வயதான சந்தேகநபரை எதிர்வரும் 30ஆம் திகதி வரையிலும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.



# 70,000 குடும்பங்களுக்கு பால்மா

ஊடாக 174 மில்லியன் ரூபாய் பெறுமதியான பால்மாவை பெற்றுக் கொடுக்க பொன்டெரா நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது.

பொன்டெரா நிறுவனத்தின் பிரதான நிறைவேற்று அதிகாரி திருமதி ஜூடித் ஸ்வொல்ஸ், இப்பால்மாவை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் ஜனாதிபதி அலுவலகத்தில் உத்தியோகப்பூர்வமாக செவ்வாய்க்கிழமை (17) கையளித்தார். நாடுமுழுவதும் அடையாளம் காணப்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ள 70,000 குடும்பங்களுக்கு இப்பால்மா, மாவட்டச் செயலாளர் அலுவலகத்தன் ஊடாக பகிர்ந்தளிக்கப்படும்.

இந்நிகழ்வில் கலந்து கொண்ட தேசிய உணவுப் பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதி குழுவின் தலைவரும் ஆலோசகருமான கலாநிதி சுரேன் படகொட கருத்து தெரிவிக்கையில், அனைத்து பிரஜைகளுக்கும் அவசியமான போஷாக்கு கிடைப்பதை உறுதி செய்வதே அரசாங்கத்தின் உணவு பாதுகாப்பு வேலைதிட்டத்தின் நோக்கமாகும் என்றார்.

மிகவும் பாதிப்புக்குள்ளான குடும்பங்களுக்கு போஷணை தேவையை ஈடுசெய்வதே இதன் பிரதான குறிக்கோள் என்றும் அதற்கு ஒத்துழைப்பு வழங்க முன்வந்தமைக்காக பொன்டெரா நிறுவனத்துக்கு நன்றி தெரிவிப்பதாகவும் அவர் கூறினார்.

# தமிழ்க் கட்சிகளுக்கு பொன்சேகா அறிவுரை



நாட்டில் இன்று வரிசைகள் இல்லையென்று சிலர் மகிழ்ச்சியடைகின்றனர். விலைகள் அதிகரித்ததுடன், கூப்பன் முறைகளும் கொண்டு வரப்பட்டன. இதனாலேயே வரிசைகள் இல்லாமல் போயின. ஆனால், மக்களின் வாழ்க்கை மற்றும் நாட்டின் பொருளாதாரம் முன்னேறியது என்று கூற முடியாது. வாழ முடியாத நாடே இப்போது காணப்படுகின்றது.

விலைகள், கட்டணங்கள் மக்களால் தாங்கிக்கொள்ள முடியாத நிலைமையே காணப்படுகின்றது. வரிச்சுமைகள் அதிகரித்துள்ளதுடன், வருமான வரி அதிகரிக்கப்பட்டதால் பலரும் பாதிக்கப்பட்டுள்ளனர். பல்வேறு சுற்றுலாத்துறை நிறுவனங்களை மூடும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

இப்போது ஜனாதிபதி அரசியல் இலாபத்திற்காக தற்போதைய அரசாங்கத்துடன் இணைந்து குழம்பிய குட்டையில் மீன் பிடிக்க முயற்சிக்கின்றார். அவர் 13 ஆவது அரசியலமைப்பு திருத்தம் தொடர்பில் கூறுகின்றார். அனைத்து மாகாண முதலமைச்சர்களும் பொலிஸ், காணி அதிகாரங்கள் கிடைப்பதை விரும்புவதாக தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றில் கூறியுள்ளனர். அது முற்றிலும் பொய்யாகும். அவ்வாறு எவரும் அதனை கேட்கவில்லை என்றார்.

இந்த நேரத்தில் தமிழ் அரசியல் கட்சிகள் மற்றும் வடக்கு, கிழக்கு அரசியல்வாதிகள் இவ்வாறான விடயத்தில் பங்களித்து பாவத்திற்கு உள்ளாக வேண்டாம் என்று கேட்கின்றோம். 13ஆம் திருத்தம் ஊடாக அனைத்தையும் பெற்றுக்கொள்வதற்கு நாடு பொருளாதாரத்தில் முதலில் அபிவிருத்தி ஏற்பட வேண்டும். இல்லாது அதனை நிறைவேற்றினால் நாட்டில் இனவாதம், பிரிவினைவாதம் ஏற்பட்டு மக்களிடையே குழப்பமே ஏற்படும் என்றார்.

சின்னத்தேர்தல்

# உரிய நேரத்தில் நடத்தப்படும்

## தேர்தல்கள் ஆணைக்குழு உயர் நீதிமன்றத்தில் தெரிவிப்பு

தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் உள்ளிட்ட உறுப்பினர்கள் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ், உயர் நீதிமன்றத்தில் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை இடைநிறுத்துவதற்கான உத்தரவை பிறப்பிக்குமாறு கோரி முன்னாள் இராணுவ கேர்ணல் டப்ளியு.எம்.ஆர் விஜேசுந்தர தாக்கல் செய்த ரிட் மனுவை தள்ளுபடி செய்யுமாறு தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் நேற்று(18) பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட சந்தர்ப்பத்திலேயே சட்டத்தரணி சாலிய பீரிஸ் இதனை கூறியுள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர்களான ரஞ்சித் மத்தும பண்டார, பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் உள்ளிட்டோரால் இந்த மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

அனைத்து தரப்பினரும் முன்வைத்த கருத்துகளை பரிசீலித்த, பிரியந்த ஜயவர்தன, எஸ். துரைராஜா மற்றும் பி.பத்மன் சூரசேன ஆகியோர் அடங்கிய நீதியரசர்கள் குழாம், மனுக்களை எதிர்வரும் 10ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ள தீர்மானித்துள்ளது.



# சில தீர்ப்புகளினால் பலர் தண்டிக்கப்படலாம்

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை கடுமையான விமர்ச்சித்து கருத்து வெளியிட்டிருந்த நிலையில், அந்த விவாதத்தில் சரத் பொன்சேகாவுக்கு பதிலளிக்கும் வகையில் கருத்து தெரிவிக்கையிலேயே தயாசிறி ஜயசேகர இவ்வாறு கூறினார்.

தனக்கு பொலிஸ் அமைச்சுப் பதவியை முன்னாள் ஜனாதிபதியி வழங்காத காரணத்தினாலேயே பொன்சேகா, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மீது விமர்சனங்களை முன்வைக்கின்றார். அவர் இராணுவத் தளபதியாக இருந்தவர் என்பதனால் அவரை பொலிஸ் அமைச்சராக நியமிக்க வேண்டாம் என்று பல்வேறு பொலிஸ் அதிகாரிகளும் கேட்டுக்கொண்டனர். இதன்படியே அவருக்கு அந்த அமைச்சுப் பதவியை வழங்கவில்லை.

இன்னும் சில காலத்தில் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்கும் இதுபோன்ற தீர்ப்புக்கு உள்ளாகலாம். அதாவது அவர் யுத்தத்துக்கு உத்தரவிட்டிருப்பார். முன்னாள் ஜனாதிபதி தொடர்பில் விமர்சனங்களை கூறிக்கொண்டு தானும் அதுபோன்ற குற்றங்களை செய்துள்ளார். இந்தத் தீர்ப்பின் ஊடாக யுத்தத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தொடர்பில் முன்மாதிரியொன்று ஏற்பட்டுள்ளது. மனித உரிமைகள் பேரவையில் போர்க் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. இராணுவத் தளபதிக்கு அமெரிக்கா போக முடியாது. முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய, முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோருக்கு கனடாவுக்கு போக முடியாது. யுத்தத்தினால் ஏற்பட்ட நிலைமையே இதற்கு காரணமாகும் என்றார்.

மனித உரிமைகள் பேரவையில் வழக்குத் தொடர்ந்தால் இவர்கள் அனைவரும் தண்டனைக்கு உள்ளாக நேரிடும். இந்த நாட்டுக்காக சேவையாற்றிய யுத்த வெற்றிக்காக உத்தரவிட்ட மஹிந்த ராஜபக்ஷ, கோட்டாபய ராஜபக்ஷ, சந்திரிகா குமாரதுங்க, சரத் பொன்சேகா ஆகியோருக்கும் கோடி கணக்கில் நஷ்ட ஈட்டை செலுத்த வேண்டி வரலாம். இதன்படி முன்னாள் ஜனாதிபதிக்கு எதிரான தீர்ப்பு இந்த அதிகாரிகளுக்கும் பயன்படுத்தலாம் என்பதனையே சுட்டிக்காட்டுகின்றது என்றார்.

# புலிகளின் கைபொம்மை கனடா



முன்னாள் ஜனாதிபதிகளான மஹிந்த ராஜபக்ஷ, கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோர் மீது கனடா பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளது. மேலும், சுனில் ரத்னநாயக்க, சந்தன ஹெட்டியாராச்சி ஆகியோருக்கு எதிராகவும் தடைகள் விதிக்கப்பட்டுள்ளன. இதனை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். இலங்கையில் நடைபெற்றது சிவில் யுத்தமென கனடா கூறுகிறது. ஆனால் இலங்கையில் நடைபெற்றது சிவில் யுத்தமல்ல எனவும் தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதிகளான மஹிந்தவும், கோட்டாவும் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டதாக எந்தவிதமான குற்றச்சாட்டுக்களும் தனிப்பட்டவகையில் அவர்களுக்கு இல்லாத நிலையில் எந்த அடிப்படையில் தடை விதிக்கப்பட்டது. மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டமைக்கான ஆதாரங்கள் இருக்கிறதா? பிரிவினை வாதிகளை சந்தோஷப்படுத்துவதற்காக இந்தத் தடைகள் விதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

சுனில் ரத்னாயக்கவுக்குக் கிடைக்கப்பெற்ற பொதுமன்னிப்பை எதிர்க்கும் கனடா, முன்னாள் விடுதலைப் புலிக உறுப்பினர்களை பொதுமன்னிப்பில் விடுவிக்கும்போது மாத்திரம் ஏன் எதிர்ப்பதில்லை. எதற்காக இந்த இரட்டை நிலைப்பாடு? மனித உரிமைகளை கனடா செய்திருக்கிறது. எனவே மனித உரிமை மீறல் தொடர்பில் பேச கனடாவுக்கு அருகதை இல்லை. சர்வதேச ரீதியில் தடைச் செய்யப்பட்ட பயங்கரவாதிகளின் கைப்பொம்மையாகக் கனடா இருப்பதாக வரலாற்றில் பதியப்படும் எனவும் தெரிவித்தார்.

# மாணவர்களுக்கு மாற்றுவழி

மேலும், 2005ஆம் ஆண்டுக்கு பின்னர் பிறந்தவர்களுக்கான தேசிய அடையாள அட்டை வழங்கும் நடவடிக்கை எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் வரை இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார். அதற்கமைய, தேசிய அடையாள அட்டைகளை அச்சிடுவதற்கு பயன்படுத்தப்படும் அட்டைகளின் தற்போதைய தட்டுப்பாடு நீங்கும் வரை தேசிய அடையாள அட்டைகளை வழங்குவதை கட்டுப்படுத்த வேண்டியுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

# இந்திய பஸ்கள் 500 வருகின்றன

அதேபோல் 5,000க்கும் அதிகமான அசோக் லேலண்ட் பேருந்துகள் தற்போது இலங்கை போக்குவரத்து சபையுடன் இயங்கி வருவதாகவும் நிறுவனம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் பொதுப் போக்குவரத்து உள்கட்டமைப்பை வலுப்படுத்த உதவிய இந்திய அரசுக்கு நாங்கள் நன்றி தெரிவித்துக் கொள்கிறோம் என்று அசோக் லேலண்டின் சர்வதேச நடவடிக்கைகளின் தலைவர் அமன்தீப் சிங் தெரிவித்துள்ளார்.

# இலங்கைக்கு நாமே கை கொடுக்கிறோம்

இலங்கைக்கு சகல விதங்களிலும்அமெரிக்காவே தடையாக இருப்பதாகவும் சீன தூதரகம் குற்றம் சுமத்தியுள்ளது.

ஐக்கிய இராச்சியத்தின் தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றுக்கு இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் வழங்கியிருந்த நேர்காணலின்போது, சர்வதேச நாணய நிதியத்துடனான இலங்கையின் பேச்சுவார்த்தையில் சீனா தடையாக இருப்பதாக குற்றம் சுமத்தியுள்ளார்.

ஆனால், இலங்கைக்கும் சர்வதேச நாணய நிதியத்துக்கும் இடையிலான பேச்சுவார்த்தையை சீனா சீர்குலைப்பதாக கூறும் அமெரிக்காவின் குற்றச்சாட்டை தாம் நிராகரிப்பதாகவும், இவை ஆதாரமற்ற குற்றச்சாட்டு எனவும் சீன தூதரகம் தெரிவித்துள்ளது.

இவ்வாறான விமர்சனங்களுக்கு செல்லும் முன்னர், அமெரிக்கா தம்மைத்தாமே சில கேள்விகள் கேட்டுக்கொள்ள வேண்டும். சர்வதேச நாணய நிதியத்தின் கொள்கை முடிவுகளில் வீட்டோ அதிகாரத்தை கொண்டிக்கும் நாடு எது? இலங்கையின் மொத்தக்கடன்களில் 40 சதவீதமான வட்டி வீதங்களுடன் கடனளிப்பவர்கள் எங்குள்ளவர்கள்? அமெரிக்க நீதிமன்றில் இலங்கையின் இயல்பு நிலைக்கு எதிராக வழக்கு தொடர்ந்தது யார்? என்ற கேள்விகளை அமெரிக்க தூதுவர் தம்மை தாமே கேட்டுக்கொள்ளவேண்டும் என சீனத் தூதரகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

தற்போதைய நெருக்கடி நிலையில், இலங்கை மக்களுக்கு ஏற்கெனவே 10,000 மெட்ரிக் தொன் அரிசி, 9,000 லீற்றர் டீசல், 5 பில்லியன் ரூபாய் பெறுமதியான மருந்துகள் மற்றும் 3 மில்லியன் ரூபாய் பெறுமதியான பாடசாலை சீருடைப் பொருட்களை சீனா அர்ப்பணிப்பாக வழங்கியுள்ளது. எனினும், இலங்கை மக்களுக்காக அமெரிக்கா எவ்வாறு நடந்துகொண்டது? என்பதையும், அமெரிக்க உதவியின் அரசியல் முன் நிபந்தனைகள் என்ன என்றும் இலங்கை மக்கள் கேள்வி எழுப்பலாம் என சீனத் தூதரகம் குறிப்பிட்டுள்ளது.

எனவே, சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையில் முரண்பாடுகளை ஏற்படுத்துவதற்கு பதிலாக, இலங்கைக்காக, சர்வதேச நாணய நிதியத்தில் அமெரிக்கா ஏன் தீர்க்கமான நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்றும் சீனத் தூதரகம் கேள்வி எழுப்பியுள்ளது.



# மைத்திரிக்காக பணம் திரட்டிய கலைஞர்

அத்துடன் புறக்கோட்டை வியாபாரிகள் நிதியுதவி வழங்கினால் அதனை பெற்றுக்கொள்வேன் ஏனெனில் என்னிடம் நிதியில்லை என பாராளுமன்றத்தில் அவர் தெரிவித்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# 17 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது

இந்த விவாதத்தில் தமிழ் தேசியக்கட்சிகள் எதுவும் பங்கேற்கவில்லை.

விவாத முடிவில் ஜே .வி.பி. எம்.பி. விஜித ஹேரத் வாக்கெடுப்பைக்கோரினார்.இதனையடுத்து இடம்பெற்ற இலத்திரனியல் வாக்கெடுப்பில் புனர்வாழ்வு பணியக சட்டமூலத்திற்கு ஆதரவாக 23 வாக்குகளும் எதிராக 6 வாக்குகளும் அளிக்கப்பட்ட நிலையில் 17 மேலதிக வாக்குகளினால் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டது, இந்த சட்டமூலத்திற்கு ஆதரவாக அரச தரப்புடன் இணைந்து எதிர்தரப்பு எம்.பி. அதாவுல்லா வாக்களித்த நிலையில் எதிராக பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியை சேர்ந்த 4 எம்.பி.க்களும் ஜே .வி.பி.யை சேர்ந்த இரு எம்.பி.க்களுமாக 6 பேர் வாக்களித்தனர். 195 எம்.பி.க்கள் வாக்களிப்பில் பங்கேற்கவில்லை.



பா. நிரோஸ்
ddnirosh@gmail.com

# தேர்தலை தனிநபர் தீர்மானிக்க முடியாது

ஜனாதிபதி நிறைவேற்று அதிகாரத்தை பயன்படுத்தி பாராளுமன்ற செயற்பாடுகளில் தலையிட்டு பாராளுமன்றத்தை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முயற்சிப்பது அரசியலமைப்பிற்கு முரண் என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார். உள்ளூராட்சிமன்றத் தேர்தலை நடத்த வேண்டுமா, தேர்தலை பிற்போட வேண்டுமா என்பதை தனிநபர் தீர்மானிக்க முடியாது எனவும் அவர் தெரிவித்தார்.

உள்ளூராட்சிமன்றத் தேர்தலை நடத்த தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு ஆரம்பக்கட்ட நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ள நிலையில் தேர்தல் நடவடிக்கைகளுக்கு பாதிப்பு ஏற்படுத்தும் வகையில் அரசாங்கம் செயற்படுவதை அவதானிக்க முடிகிறது. ஜனாதிபதி பாராளுமன்றத்திற்கு பொறுப்புக்கூற வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்கிறோம், ஆனால் ஜனாதிபதி பாராளுமன்றத்தை தனது நிறைவேற்று அதிகாரத்தின் ஊடாக கட்டுப்படுத்த முயற்சிக்கிறார். முத்துறைகளின் அதிகாரம் அரசியலமைப்பின் ஊடாக வேறுபடுத்தப்பட்டுள்ள நிலையில் நிறைவேற்றுத்துறை சட்டவாக்கத்துறையை கட்டுப்படுத்துவது அரசியலமைப்பிற்கு முரண்.

உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்கான கட்டுப்பணம் செலுத்தல் பணியில்



இருந்து விலகுமாறு அரச நிர்வாக அமைச்சின் செயலாளர் வெளியிட்ட சுற்றறிக்கைக்கு யார் பொறுப்பு என்பது சர்ச்கைக்குரியதாக உள்ளது. குறித்த சுற்றறிக்கை தொடர்பில் அமைச்சரவை தீர்மானம் எடுக்கவில்லை என பிரதமர் குறிப்பிடுகிறார், ஆனால் அமைச்சரவை தீர்மானத்தை தான் செயற்படுத்தியதாக அரச நிர்வாக அமைச்சின் செயலாளர் குறிப்பிடுகிறார். தேர்தல் விடயத்தில் நிறைவேற்றுத்துறை அரசியலமைப்பு, பாராளுமன்றம் மற்றும் அமைச்சரவையை நெருக்கடிக்குள்ளாக்கியுள்ளது. உள்ளூராட்சிமன்றத் தேர்தலை நடத்த கூடாது என்ற சிந்தனையில் இருந்துகொண்டு ஜனாதிபதி செயற்படுகிறார். தேர்தலை நடத்த வேண்டுமா இல்லையா என்பதை தனிநபர் ஒருவர் எவ்வாறு தீர்மானிக்க முடியும் என்றார்.

## பாராளுமன்றச் செயற்பாடுகளில் ஜனாதிபதி தலையிட முடியாது

தேர்தல் செலவினத்தை ஒழுங்குபடுத்துதல் சட்டமூலம் நிறைவேற்றப்பட மார்ச் மாதம் நடைபெற உள்ள உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கு கண்டிப்பாக பாதிப்பு ஏற்படும் என தெரிவிக்கும் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு பாராளுமன்ற செயற்பாடுகளில் தலையிட முடியாதெனவும் தெரிவித்தார்.

தேர்தல் செலவினத்தை ஒழுங்குபடுத்துதல் சட்டமூலம் நிறைவேற்றப்பட வேண்டும். இச்சட்டமூலத்தில் சில குறைப்பாடுகள் இருந்தாலும் இதுவொரு சிறந்த சட்டமூலம். எவ்வாறாயினும் உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான கட்டுப்பணம் செலுத்தப்பட்டு வரும் தற்போதைய



நிலையில் இச்சட்டமூலம் நிறைவேற்றப்பட்டால் உள்ளூராட்சி மன்ற தேர்தலை நடத்துவதில் கண்டிப்பாகப் பாதிப்பு ஏற்படும் என திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

இச்சட்டமூலத்தின் படி தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் தங்களது தேர்தல் செலவுகள், நன்கொடைகள் போன்ற செலவுகள் தொடர்பில் முறையான அறிக்கையை தேர்தல் ஆணைக்குழுவுக்கு வழங்க வேண்டும். இதனை செய்ய தவறினால் அது தண்டனைக்குரிய குற்றம் என சட்டமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, இச்சட்டமூலம் நிறைவேற்றப்பட்டால் நாட்டின் எந்தவொரு பிரஜைகளும் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட புதிய சட்டத்தின் கீழ் தேர்தலை நடத்த வேண்டுமென கோரி உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ய முடியும். பாராளுமன்றத்தை மீறி உயர்நீதிமன்றமும் செயற்பட முடியாது என்பதால், பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட புதிய சட்டத்தின்படி தேர்தலை நடத்த வேண்டுமென உத்தரவிடும் என்றார்

## இது ஹிட்லர் முசோலினியின் நாடு அல்ல

### சபையில் கடும் சர்ச்சை

தேர்தல் செலவுகளை கட்டுப்படுத்தல் தொடர்பான சட்டமூலத்தை ஒரு மாதத்திற்கு ஒத்தி வைப்பதாக அரசாங்கம் அறிவித்துள்ள நிலையில், குறித்த சட்டமூலம் தொடர்பில் நேற்று (18) பாராளுமன்றத்தில் ஜனாதிபதி மற்றும் பிரதமரின் பங்குபற்றுதலுடன் விசேட கலந்துரையாடலுக்கு ஏற்பாடு செய்யப்பட்டமை தொடர்பில் எதிர்க்கட்சியினர் கேள்வியெழுப்பியதால் சபையில் கடும் சர்ச்சை ஏற்பட்டது.

பாராளுமன்றம் நேற்று முற்பகல் 9.30 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் கூடிய போது, சபாநாயகர் அறிவிப்பு நேரத்தில் நேற்றைய தினம் நடக்கவிருந்த பாராளுமன்ற நடவடிக்கைகள் தொடர்பான குழு கூட்டத்தை இரத்துச் செய்து, அதற்கு பதிலாக குறித்த சட்டமூலம் தொடர்பில் கலந்துரையாடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அறிவித்ததை தொடர்ந்தே சர்ச்சை ஏற்பட்டது.

சபாநாயகர் தனது அறிவிப்பில் கூறுகையில், இன்றைய தினம் (நேற்று) நடத்த தீர்மானிக்கப்பட்டிருந்த பாராளுமன்ற நடவடிக்கைகள் தொடர்பான குழு கூட்டத்தை இரத்துச் செய்வதுடன், பாராளுமன்ற கட்சித் தலைவர்கள் அவர்களின் பிரதிநிதிகள் மற்றும் பாராளுமன்ற நடவடிக்கைகள் குழு உறுப்பினர்களுடன் ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோரின் பங்குபற்றுதலுடன் தேர்தல் செலவுகளை கட்டுப்படுத்தல் தொடர்பான சட்டமூலம் தொடர்பாக கலந்துரையாடுவதற்காக விசேட கூட்டம் நடக்கவுள்ளது என்று அறிவித்தார்.

இதனை தொடர்ந்து ஒழுங்குப் பிரச்சினையை முன்வைத்து எழுந்த எதிர்க்கட்சி பிரதம கொரடாவான ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல, எங்களுக்கு பாராளுமன்ற நடவடிக்கைகள் தொடர்பான குழு கூட்டத்தையே நடத்த வேண்டும். குறித்த சட்டமூலத்தை ஒரு மாதத்திற்கு ஒத்தி வைப்பதாக கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் முடிவு எடுத்து நீதி அமைச்சர் அறிவித்துள்ள நிலையில் அது தொடர்பில் இவருக்கு ஏசியுள்ளனர். குழு கூட்டங்கள் தொடர்பில் சபாநாயகரே முடிவெடுக்க வேண்டும். வேறு யாரும் தீர்மானிக்க முடியாது என்றார்.

இவ்வேளையில் விளக்கமளித்த நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ கூறுகையில்,

எனக்கு தொலைபேசி அழைப்பெடுத்ததாக கூறுகின்றனர். அதனை கேட்டவர்கள் யார்? நானும் ஜனாதிபதியும் கலந்துரையாடினோம். பாராளுமன்ற நடவடிக்கைகள் தொடர்பான கூட்டத்தில் குறித்த சட்டமூலத்தை உள்ளூராட்சி சபை தேர்தலுக்கு தொடர்புபடாது என்றால் அதனை எடுக்கலாம் என்று கூறி அதனை ஒத்திவைக்க தீர்மானித்தோம். தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களுடனும் நாங்கள் கலந்துரையாடினோம். இந்த சட்டமூலத்திற்கு எதிர்க்கட்சியே கைகளை உயர்த்த வேண்டும். இல்லையென்றால் ஊழல் தேர்தல் முறையை நடத்திச் செல்ல வேண்டும் என்று கூறுகின்றார்களா? குறித்த சட்டமூலம் ஏற்கனவே நிகழ்ச்சி நிரலில் இருப்பதால் இது தொடர்பில் கதைப்போம் என்று ஜனாதிபதியும் பிரதமரும் கூறினர். இது தொடர்பில் பேசுவதால் என்ன பிரச்சினை உள்ளது என்றார்.

இதனை தொடர்ந்து எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேதாச கூறுகையில், தேர்தல் செலவுகளை கட்டுப்படுத்தும் சட்டமூலம் தொடர்பில் ஆலோசனை கூட்டத்தில் இதனை ஒத்தி வைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக நீதி அமைச்சர் கூறினார். இதனை நிறைவேற்றினால் குறித்த காலத்திற்குள் தேர்தலை நிறைவேற்ற முடியாது போகலாம் என்ற சந்தேகங்கள் எதிர்க்கட்சிக்கு இருப்பதால் அதனை ஒத்தி வைப்பதாக கூறினார். ஆனால் சட்டமூலம் தொடர்பில் எங்களுக்கு பிரச்சினை இல்லை. இதனை செயற்படுத்தும் நேரம் தொடர்பிலேயே பிரச்சினை உள்ளது. இவர்கள் நடக்கவுள்ள உள்ளூராட்சி தேர்தலுக்கு பாதிப்பு இல்லை என்று கூறினாலும் நிறைவேற்றிய பின்னர் அதனை வைத்து தேர்தலை ஒத்தி வைக்க நடவடிக்கை எடுக்கலாம். மக்களின் இறைமை மற்றும் சர்வஜன வாக்குரிமையை மீறும் சூழ்ச்சியே இது.

இது ஹிட்லர் முசோலினியின் நாடு அல்ல. ஜனநாயக நாடே. இதில் நீதி அமைச்சர் சூழ்ச்சிகளுக்குள் சிக்கிவிடக் கூடாது. இவர் ஒரு மாதத்திற்கு ஒத்தி வைத்துவிட்டு இப்போது எப்படி இந்த கூட்டத்தை நடத்த முடியும். ஜனநாயகத்தை மீற முயற்சித்தால் நாட்டு மக்களுக்காக நாங்கள் வீதிக்கு இறங்குவோம் என்றார்.

இதன்போது ஜே.வி.பி தலைவர் அனுரகுமார திஸாநாயக்க, பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத், ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர் சமிந்த விஜேசிறி ஆகியோரும் நீதி அமைச்சருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

### போதைப்பொருளுக்கு அடிமையானவர்களை

## சிறைகளில் அடைப்பதில் பலனில்லை

புனர்வாழ்வு அலுவலக சட்டமூலம் ஊடாக போதைப் பொருளுக்கு அடிமையாகும் இளைஞர்களை அதில் இருந்து மீட்க முடியுமாக இருக்கும் என வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார். இந்த சட்டமூலம் குறித்து பொய்யான தகவல்கள் பரப்பப்பட்டுள்ளன. சட்டமூலமொன்றை கொண்டு வருவது என்பது இலகுவானது அல்ல. அது தொடர்பாக பல்வேறு வேலைத்திட்டங்கள் உள்ளன. இதன்படியே புனர்வாழ்வு அலுவலகம் தொடர்பான சட்டமூலம் கொண்டு வரப்பட்டுள்ளது எனக் குறிப்பிட்டார்.

பிரிவினைவாதத்தால் வடக்கு, கிழக்கு மக்கள் மாத்திரமன்றி நாட்டில் உள்ள அனைத்து தரப்பினரும் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில் முன்னாள் விடுதலைப் புலிகள் 12,000 பேர் புனர்வாழ்வளிக்கப்பட்டு சமூக மயப்படுத்தப்பட்டனர். அவர்கள் பல்வேறு வேலைகளில் ஈடுபட்டுள்ளனர். இவர்களை இவ்வாறு விடுதலை செய்யாது சிறைகளில் போட்டு வழக்கு தொடர்ந்திருந்தால் அவர்கள் தொடர்பான வழக்குகள் இன்னும் முடிவடைந்திருக்காது.

இதேவேளை போதைப் பொருளுக்கு எதிராக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. இதற்கு அடிமையான இளைஞர்களை அதில் இருந்து மீட்டெடுக்க வேண்டும். அவர்களுக்கு எதிராக வழக்குத் தொடர்ந்து எவ்வளவு காலத்திற்கு வழக்குகளை இழுத்துச் செல்வது. சர்வதேச ரீதியில் தொடர்புடைய போதைப் பொருள் வர்த்தகர்கள் இருக்கின்றனர். இதனால் வர்த்தகர்களை விட்டுவிட்டு போதைப் பொருளுக்கு அடிமையானவர்களை சிறைகளில் அடைத்து சிறைகளை நிறைத்து பலனில்லை. அவர்களை புனர்வாழ்வுக்கு இடமளித்து சமூகத்தில் திருந்தி வாழ்வதற்கு வாய்ப்புகளை ஏற்படுத்த வேண்டும் என்றார்.



### அரசாங்கம்

## சூழ்ச்சிகளில் ஈடுபடுகின்றது

எரிபொருள் கப்பல்களை தாமதப்படுத்தி வரிசைகளை உருவாக்குவதற்கும், மின்வெட்டை அதிகரிப்பதற்கும் திட்டமிட்ட சூழ்ச்சிகளில் அரசாங்கம் ஈடுபடுகின்றது என எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். மரிக்கார் சபையில் குற்றம் சுமத்தினார்.

தேர்தலை தாமதப்படுத்துவதற்காக அரசாங்கம் பல்வேறு முயற்சிகளில் ஈடுபடுகின்றது. தற்போது எரிபொருள் கப்பல்களை தாமதப்படுத்துவதற்கான சூழ்ச்சிகள் நடக்கின்றன. ஜனாதிபதி அலுவலகத்தில் கடந்த வாரத்தில் இந்த விடயம் தொடர்பில் கலந்துரையாடலொன்று நடத்தப்பட்டுள்ளது. எரிபொருள் கப்பல்களை தாமதப்படுத்தல், பலவந்தமாக வரிசைகளை உருவாக்குதல், மின்வெட்டை அதிகரித்தல் ஆகியவற்றை செய்யும் அரசாங்கமே இருக்கின்றது. இவர்களின் வேலைகளுக்கு மக்கள் பழக்கப்படுகின்றனர். மக்கள் இவற்றை பொறுமையாக ஏற்றுக்கொள்கின்றனர். ஆனால் இதற்கு பதிலாக தேர்தலை மக்கள் பார்த்துக்கொண்டிருக்கின்றனர். அரசியலமைப்பை பாதுகாப்பதாக கூறிக்கொண்டு வந்தவர்கள் அதனை மீறுவதற்கே சூழ்ச்சிகளில் ஈடுபடுகின்றனர். இதில் இறுதி சூழ்ச்சியாக தேர்தல் செலவு கட்டுப்பாடுகள் தொடர்பான ஒழுங்குவிதிகள் சட்டமூலத்தை பயன்படுத்த முயற்சிக்கின்றனர் என்றார்.

### புறக்கோட்டை வியாபாரிகள்

## நிதியுதவி வழங்கினால் பெற்றுக்கொள்வேன்

புறக்கோட்டை வியாபாரிகள் நிதியுதவி வழங்கினால் அதனை பெற்றுக்கொள்வேன், ஏனெனில் என்னிடம் நிதியில்லை. உடலையும், கண்ணையும் பாதுகாத்துக் கொள்ள முடியாதவர்கள் என்னை சிறைப்படுத்துமாறு குறிப்பிடுகிறார்கள். இராணுவ தலைமையகத்தை பாதுகாத்துக் கொள்ளாத சரத் பொன்சேகாவிற்கு என்னை விமர்சிக்க தார்மீக உரிமை கிடையாது என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சபையில் குறிப்பிட்டார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற புனர்வாழ்வு பணியகச் சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷர் சரத் பொன்சேகா ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் தொடர்பில் உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை சுட்டிக்காட்டினார்.

இதன்போது குறுக்கிட்டு எழுந்து உரையாற்றிய முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன புறக்கோட்டை வியாபாரிகள் நிதியுதவி வழங்கினால் அதனை பெற்றுக்கொள்வேன், ஏனெனில் 10 கோடி ரூபா நிதி என்னிடம் இல்லை. என் மீது குற்றச்சாட்டுக்களை முன்வைக்க முன்னர் உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை முதலில் தெளிவாக படியுங்கள். ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் தொடர்பான புலனாய்வு தகவல்களை பாதுகாப்பு தரப்பினர் எனக்கு தெரிவிக்கவில்லை என உயர்நீதிமன்றம் தெளிவாக சுட்டிக்காட்டியுள்ளது. 10 கோடி ரூபா நட்டஈடே தவிர தண்டபணம் அல்ல என்பதை தெளிவாக குறிப்பிட்டுக் கொள்கிறேன்.

சரத் பொன்சேகா சிறையில் இருந்த போது நான் தான் அவருக்கு பொது மன்னிப்பு வழங்கி, பீல்ட் மார்ஷல் பதவி நிலை உயர்வு வழங்கினேன். இவ்வாறான பின்னணியின் என்மீது கடுமையான குற்றச்சாட்டுக்களை முன்வைப்பது நியாயமற்றது. ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் சம்பவத்தில் என்னை சிறைப்படுத்த வேண்டும் என சரத் பொன்சேகா உட்பட முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்க ஆகியோர் குறிப்பிட்டுக் கொள்கிறார்கள். உலக இராணுவ கோட்பாடுகளுக்கு அமைய 10 இலட்சம் இராணுவத்தினரை வழிநடத்தும் இராணுவ தளபதிக்கு பீல்ட் மார்ஷல் பதவி நிலை உயர்வு வழங்கப்படும். ஆனால் பீல்ட் மார்ஷல் பதவி வழங்குமாறு தொடர்ந்து என்னிடம் சரத் பொன்சேகா மன்றாடினார். பலவந்தமான முறையில் பீல்ட் மார்ஷல் பதவியை பெற்றுக்கொண்டார். முதலில் பாராளுமன்றத்தில் எவ்வாறு உரையாற்ற வேண்டும் என்பதை சரத் பொன்சேகா கற்றுக்கொள்ள வேண்டும், பேச்சு மொழிநடை வெறுக்கத்தக்கதாக உள்ளது என்றார்.

### புனர்வாழ்வளிக்க

## இராணுவத்தினரை பயன்படுத்தக்கூடாது

புனர்வாழ்வு பணியகம் சட்டமூலத்தின் சில சரத்துகள், அரசியலில் கடும்போக்குக் கொண்டவர்களை அடக்குவதற்காகக் கொண்டுவரப்பட்டுள்ளதாக இருப்பதாக தெரிவிக்கும் ஶ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம், இச்சட்டமூலம் சர்வதேசம் ஏற்றுக்கொண்டுள்ள அடிப்படையில் கொண்டுவரப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

எனவே, இதில் இருக்கும் சந்தேகங்களை போக்குவதற்கு இச்சட்டமூலத்தில் திருத்தங்களை மேற்கொள்ள இடமளிக்கவேண்டும். புனர்வாழ்வு பணியகம் சட்டமூலத்துக்கு நாட்டின் அண்மைக்கால வரலாற்றில் ஒருபோதும் இல்லாத வகையிலேயே உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு அமைந்திருந்தது. அந்தளவுக்கு அரசியலமைப்புக்கு முற்றுமுழுதாக முரணாகவே அமைந்திருந்தது.

தற்போது போதைப்பொருளுக்கு அடிமையானவர்களை புனர்வாழ்வளிப்பதற்கு என சிறிய திருத்தம் கொண்டுவந்துள்ளது. என்றாலும் இந்த சட்ட மூலத்தில் இருக்கும் சில சரத்துக்களை பார்க்கும்போது அரசியலில் கடும்போக்கு கொண்டவர்களை அடக்குவதற்கான நடவடிக்கையாகவே இருக்கின்றது.

போதைப்பொருளுக்கு அடிமையானவர்களை புனர்வாழ்வளிக்க இராணுவத்தினரை பயன்படுத்தக்கூடாது. எவ்வாறாயினும் புனர்வாழ்வு அளிக்கும் சட்டம் ஊடாக அரசாங்கத்துக்கு தேவையானவர்களை புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்ப முடியாது எனவும் தெரிவித்தார்.

போதைப்பொருள் பாவனையை தடுக்க

# ஒன்றிணைந்து செயற்பட தீர்மானம்

■ ஏ.எல்.எம் ஷினாஸ்



அதிகரித்துக் காணப்படும் போதைப்பொருள் பாவனையை முற்றாகத் தடுக்கும் வேலைத்திட்டத்தின் கீழ், மருதமுனை அனைத்து பள்ளிவாசல்கள் சம்மேளனம் ஏற்பாடு செய்த விசேட கூட்டம் நேற்று முன்தினம் (17) பிரான்ஸ் சிற்றி வீட்டுத் திட்டத்தில் உள்ள றையான் ஜும்ஆ பள்ளிவாசல் மண்டபத்தில் நடைபெற்றது.

மருதமுனை பிரதேசத்தில் உள்ள 22 பள்ளிவாசல்களின் பிரதிநிதிகள், பெரியநீலாவனை விசேட அதிரடிப் படை பொறுப்பதிகாரி ஆர்.ஏ.சி. டி.ஏ ரத்நாயக்க, பெரியநீலாவனை பொலிஸ் நிலைய சிரேஸ்ட பொலிஸ் பரிசோதகர்களான ஏ.எம் நஸார், எம்.எல் நஜீம் ஆகியோரும் இதில் கலந்து கொண்டனர்.

இங்கு பொலிஸார் கருத்து தெரிவிக்கும் போது, போதைவஸ்து பாவனை, இப்போது கண்ணுக்குத் தெரியாத வகையில் விஸ்வரூபம் எடுத்திருக்கிறது. பொலிஸார் வருவதாக தகவல் கிடைத்ததும் உடனடியாக அவற்றை அருகில் தூக்கி வீசி விடுகிறார்கள். இந்நிலையில் அவர்களை கண்ட மாதிரி நாம் கைது செய்ய முடியாது. ஏனெனில் குறித்த நபரை பொலிஸார் கைது செய்வதன் ஊடாக தனது அடிப்படை உரிமை மீறப்பட்டு இருப்பதாக குற்றம் சுமத்தி, எங்கள் மீதும் பழியை போடுகிறார்கள். இது ஒரு பாரிய சிக்கலாகும்.

எனவே சமூக மட்டத்தில் போதைப்பொருளை தடுப்பதற்கு அனைத்து பள்ளிவாசல்கள் சம்பளம், சிவில் சமூக அமைப்புகள், பொலிஸாருக்கு உதவிக்கரம் நீட்ட வேண்டும். போதைப்பொருள் பாவிப்பவர்கள் என அடையாளம் கண்டவர்களை புனர்வாழ்வளித்து, அவர்களுக்கு தேவையான விழிப்புணர்வுகளை வழங்குவதற்கு சமூகம் சார்ந்த நிறுவனங்கள் முன்வர வேண்டும் எனத் தெரிவித்தனர்.

கூட்டத்தின் இறுதியில் பொலிஸார், அதிரடிப்படையினர், சிவில் சமூகப் பிரதிநிதிகள், பள்ளிவாசல்களின் நிர்வாகங்கள் என எல்லோரும் ஒன்று இணைந்து விசேட வேலைத்திட்டங்களை தொடர்சியாக நடைமுறைப்படுத்துவது எனவும் தீர்மானிக்கப்பட்டன.

## கரை ஒதுங்கிய இராட்சத ஆமை



■ வ. சக்தி

மட்டக்களப்பு மாவட்டம் களுதாவளைக் கடற்கரையில் உயிரிழந்த நிலையில் இராட்சத ஆமை புதன்கிழமை(18) காலை கரை ஒதுங்கியுள்ளது. கடற்கரைக்குச் சென்ற மீனவர்கள் ஆமை கரை ஒதுங்கிக்கிடப்பதை அவதானித்துள்ளனர்.

சுமார் 50 கிலோ கிராமுக்கு மேல் நிறை இருக்கும் எனவும் மீனவர்கள் தெரிவித்தனர். கடந்த வருடமும் இவ்வாறு கிழக்குக் கடற்கரைப் பகுதியில் பல ஆமைகள் உயிரிழந்த நிலையில் கரை ஒதுங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.



## போரதீவுப்பற்று செயலகத்தில் பொங்கல் விழா

மட்டக்களப்பு மாவட்டத்தின், போரதீவுப்பற்று பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் இரா. ராகுலநாயகியின் தலைமையில் பொங்கல் விழா புதன்கிழமை (18) நடைபெற்றது. இந்நிகழ்வை பிரதேச செயலகத்தின் கலாசார பிரிவின் ஒழுங்கமைப்பில், அனைத்து பிரிவுகளும் இயற்கையாகக் கிடைக்கின்ற அனைத்து பொருட்களையும் கொண்டு பொங்கல் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

வ. சக்தி





உள்ளூராட்சி சபைத் தேர்தல்

## உயர்நீதிமன்றிலிருந்து முதலாவது இடைக்காலத் தடை

■ பாறுக் ஷிஹான்

கல்முனை மாநகர சபை தேர்தலில் போட்டியிடுவோர் வேட்புமனுவை, ஜனவரி 19ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்வதை நிறுத்துமாறு உயர்நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்து, இடைக்காலத் தடையை விதித்துள்ளது.

செவ்வாய்க்கிழமை (17) எம்.ஏ மொஹமட் சலீம் என்பவர் தாக்கல் செய்த அடிப்படை உரிமைமனு மீதான விசாரணையின் அடிப்படையில் இந்தத் தடை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதன்படி ஜனவரி 19ஆம் திகதி வரையில் குறித்த மாநகர சபைத் தேர்தலுக்கான கட்டுப்பணத்தை ஏற்க முடியாது. அத்துடன் இந்த மனுவில் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ள கல்முனை மாநகர மேயர் மற்றும் சபையின் உறுப்பினர்களுக்கும் நீதிமன்றம் அழைப்பாணை விடுத்துள்ளது.

2019ஆம் ஆண்டு மஹிந்த ராஜபக்ஷ பிரதமர் ஆனதும், சாய்ந்தமருதுக்கான சபையை வழங்கும்படி வர்த்தமானி ஒன்றை வெளியிட்டிருந்தார். இதைத் தொடந்து சாய்ந்தமருதில் பெரும் விழாவாக கொண்டாடப்பட்டது.

உடனடியாக சஜித் கட்சியின் மரிக்காரும் ஹிருணிக்காவும், முஸ்லிம் பயங்கரவாதிகள் வெடித்து இறந்த சாய்ந்தமருதுக்கு, மஹிந்த சபை வழங்கியுள்ளார் எனப் பாராளுமன்றிலும் ஊடகங்களிலும் பேசினர்.

இதனை தொடர்ந்து, மேற்படி வர்த்தமாணி அறிவித்தல் இடைநிறுத்தப்பட்டது. எனினும் இன்னொரு வர்த்தமாணி மூலம் இரத்து செய்யப்படவில்லை.

இந்நிலையில், இவ்வாறு ரத்து செய்யப்படாத நிலையில், சபையும் வழங்காம கல்முனைக்கான தேர்தல் வைப்பது அடிப்படை உரிமை மீறல் என, வழக்கு தொடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.






## வெள்ளி விழாக் காணும் விபுலானந்தா முன்பள்ளி

■ காரைதீவு சகா

காரைதீவு விபுலானந்தா மொண்டசோரி பாடசாலையின் 25வது வருடாந்த விபுலமணிகளின் விடுகை விழா, பாடசாலை பணிப்பாளர் வி.ரி சகாதேவராஜா தலைமையில், காரைதீவு இராமகிருஷ்ண சங்க பெண்கள் பாடசாலையில் நடைபெற்றது.

விழாவில் பிரதம அதிதியாக காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில், ஆளுமை சார் அதிதியாக காரைதீவு பிரதேச செயலாளர் சிவ ஜெகராஜன், கௌரவ அதிதிகளாக கல்முனை மாநகர சபை உறுப்பினர் சந்திரசேகரன் ராஜன், பொலனறுவை மாவட்ட செயலக பிரதம கணக்காளர் சிவசுந்தரம் சசிகரன், கல்முனை வலய உதவி கல்வி பணிப்பாளர் ஆனந்தகுமாரசாமி சஞ்சீவன், தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் கல்லாறு பிராந்திய பொறுப்பதிகாரி பொறியியலாளர் றோட்டரியன் விஜயரெத்தினம் விஜயசாந்தன், காரைதீவு மக்கள் வங்கி முகாமையாளர் திருநாவுக்கரசு உமாசங்கரன் ,ஓய்வு நிலை அதிபர் கணபதி பிள்ளை புண்ணிய நேசன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். ஆசிரியர்களான ஜெயநிலந்தினி, ரம்யா ஆகியோர் பெற்றோரால் கௌரவிக்கப்பட்டார்கள். பிள்ளைகளின் கண் கவர் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

# ஜோடிகளுக்கு எச்சரிக்கை

■ செந்தூரன் பிரதீபன்

யாழ்ப்பாண நகரப்பகுதியில் உள்ள தங்குமிட விடுதி ஒன்றில், தங்கி நின்ற தம்பதிகளை யன்னல் வழியாக வீடியோ பதிவு செய்த சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

அங்கு கடமை புரியும் ஊழியரே இந்த வீடியோவை பதிவு செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த விடுதியில் உள்ள அனைத்து அறைகளிலும் உள்ள சுவர்களில் ஓரிரு இடங்கள் சுரண்டப்பட்டு, அங்கு திருட்டுத்தனமாக கமெராக்கள் வைத்து, அதன் மூலமாக வீடியோ பதிவை தொடர்ச்சியாக செய்து வந்தமை கண்டறிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்திருந்த தென்னிலங்கையை சேர்ந்த தம்பதி, குறித்த விடுதியில் தங்கியிருந்துள்ளனர். யன்னல் வழியாக அவர்கள் உறங்குவதை ஒருவர் படம் பிடித்துள்ளார்.

இதனை அவதானித்த கணவர், யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்ட வேளை, குறித்த விடுதியில் உள்ள அனைத்து அறைகளிலும் ஓரிரு இடங்கள், சுரண்டப்பட்டு அங்கு கமெராக்களை பொருத்தி அதன் மூலமாக வீடியோக்கள் பதிவு செய்து வந்துள்ளமை தெரிய வந்துள்ளமை கண்டறியப்பட்டது.

இதனையடுத்து, அங்கு கடமையாற்றியிருந்த ஊழியர்கள் சிலர் தலைமறைவாகிவிட்டனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கடமைகள் ஏற்பு

■ நிதர்சன் வினோத்



யாழ்ப்பாண மாவட்ட செயலாளராக அம்பலவாணர் சிவபாலசுந்தரன், புதன்கிழமை (18) தனது கடமைகளை பொறுப்பேற்றுக்கொண்டார்.

புதிதாக நியமனம் பெற்ற மாவட்ட செயலாளர், யாழ்.மாவட்ட செயலகத்தில் காலை 10 மணிக்கு இடம்பெற்ற விசேட நிகழ்வில், பதில் மாவட்ட செயலாளர் ம.பிரதீபனிடம் இருந்து கடமைகளை பொறுப்பேற்றார். இந்நிகழ்வில், வடமாகாண பிரதம செயலாளர் சமன் பந்துலசேன, யாழ். மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், வடமாகாண விவசாய அமைச்சு அலுவலக உத்தியோகத்தர்கள் பிரதேச செயலர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.



## தைப்பொங்கல் விழா

■ சண்முகன் தவசீலன்

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் தைப்பொங்கல் விழா, செவ்வாய்க்கிழமை (17) சிறப்பாக நடைபெற்றது.

உழவர் திருநாளாம் தைப்பொங்கல் தினத்தினை கொண்டாடும் நிகழ்வாக இந் நிகழ்வு அமைந்தது. இதன்போது அலுவலக முன்றலில் பொங்கல் பொங்கிப் படைத்து விழா சிறப்பிக்கப்பட்டது.

இந்த விழாவில் மாவட்ட அரசாங்க அதிபர் திரு.க.விமலநாதன், மேலதிக மாவட்ட அரசாங்க அதிபர் திரு. க.கனகேஸ்வரன் (நிர்வாகம்) மேலதிக மாவட்ட அரசாங்க அதிபர் திரு.எஸ்.குணபாலன் (காணி), உதவி அரசாங்க அதிபர் லிசோ கேகிதா மற்றும் சிரேஸ்ட பதவிநிலை உத்தியோகத்தர்கள், பதவிநிலை உத்தியோகத்தர்கள், ஏனைய உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.




## தட்டுப்பாடுகள் நிவர்த்திக்கோரி கவனயீர்ப்பு போராட்டம்

■ செ.கீதாஞ்சன்

அரச வைத்தியசாலைகளில் நிலவும் மருந்து மற்றும் உபகரணங்களுக்கான தட்டுப்பாட்டை உடனடியாக தீர்க்ககோரி முல்லைத்தீவு மாவட்ட அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினர் கவனயீர்ப்பு போராட்டத்தை புதன்கிழமை (18) முன்னெடுத்தனர். முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் சிகிச்சைக்காக வந்த நோயாளர்கள், வெளிநோயாளர்கள் பிரிவில் காத்திந்த நேரம் மாவட்ட அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினர், நாட்டில் நிலவும் மருத்து தட்டுப்பாடு மற்றும் மாவட்டத்தில் நிலவும் மருந்து தட்டுப்பாட்டினை எடுத்து கூறி துண்டு பிரசுரங்களை மக்களுக்கு வழங்கி கவனயீர்ப்பு நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

மருத்துவமனைக்கு மருத்துவ சேவையினை பெற்றுக்கொள்ளவரும் நோயாளர்களுக்கு எந்தவித தடங்கல்களும் பாதிப்புக்களும் ஏற்படாத வண்ணம் கவனயீர்ப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

புற்றுநோய், சத்திர சிகிச்சைக்குரிய மருந்துகள் இல்லாத நிலையையும், மருந்துகளை அரசாங்கம் இறக்குமதி செய்யவில்லை அதனால் மக்கள் வெளியில் மருந்துகளை வாங்கவேண்டி நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்கள் என்றும் சுட்டிக்காட்டினர்.

இந்த அரசாங்கம் தரம் குறைந்த மருந்துகளை கொள்வனவு செய்கின்றது. பதிவுசெய்யப்படாத நிறுவனங்களில் இருந்து கொள்வனவு செய்கின்றனர். இதனால் பாதிக்கப்படுவது நோயாளர்கள் என்பதையும் மக்களுக்கு எடுத்துரைத்துள்ளார்கள்

இதேவேளை தன்னிச்சியான அசாதாரண வரித்திருத்தத்தினை மீள பெற வலியுறுத்தியும் கவனயீர்ப்பு முன்னெடுக்கப்பட்டுள்ளது. நாட்டின் பணவீக்கம் வானுயர உள்ள நிலையில் படித்தவன் வீதியில் நிற்பதா போன்ற வாசகங்களை எழுதிய பதாகைகளையும் தாங்கியவாறு கவனயீர்ப்பு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனைக்கு வெளியில் வந்த மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினர் கைகளில் பதாதைகளை தாங்கியவாறு நகர்ந்து மருத்துவ மனை வளாகத்துக்கு வெளியில் வந்து முல்லைத்தீவு, முள்ளியவளை முதன்மை வீதியில் தங்கள் கவனயீர்ப்பையும் முன்னெடுத்தனர்.

## மாணவர்கள் பலர் மீது மது வெறியில் தாக்குதல்

■ நடராசா கிருஸ்ணகுமார்

மது வெறியில் இருந்தவர்களினால் பாடசாலை மாணவர்கள் தாக்கப்பட்டமை தொடர்பாக நான்கு பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். மூவர் கைது செய்யப்படவில்லை என பெற்றோர்களினால் தெரிவிக்கப்படுகின்றது.

கிளிநொச்சி கண்ணகைபுரம் கிராமத்தில் இருந்து முக்கொம்பன் மகா வித்தியாலயத்திற்கு வருகை தந்த மாணவர்களில் 15 மாணவர்கள் மீது, வழியில் போதையில் நின்ற நான்கு பேரினால் தடிகளினால் கடந்த மூன்று நாட்களுக்கு முன்னர் தாக்கியுள்ளனர்.

கண்ணகைபுரம், 150 வீட்டுத் திட்டப் பகுதிகளில் கசிப்பு உற்பத்தி கூடுதலாக காணப்படுவதாகவும் இதனை கட்டுப்படுத்துமாறு பொது மக்களினால் தெரிவிக்கப்பட்ட நிலையில் மாணவர்கள் தாக்கப்பட்ட சம்பவம் இடம் பெற்றுள்ளது.

கசிப்பினை கட்டுப்படுத்துவதற்கு முக்கொம்பனில் காவல் பிரிவு ஒன்று அமைக்குமாறு பெற்றோர்களினால் ஆர்ப்பாட்டம் நடாத்தப்பட்டு இரணைமடுவில் உள்ள கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்டங்களுக்கான பிரதி பொலிஸ் மா அதிபரின் அலுவலகத்தில் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

இந்நி நிலையில் மாணவர்கள் தாக்கப்பட்ட சம்பவம் இடம் பெற்றுள்ளது. தாக்குதலினால் பாதிக்கப்பட்ட மாணவர்கள் பலர் பாடசாலைக்கு செல்வதில்லை எனவும் மாணவர்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பெற்றோர்கள் தெரிவிக்கின்றனர்.

## 6 கி.கி கஞ்சாவை கடத்திய இருவருக்கும் விளக்கமறியல்

■ செ.கீதாஞ்சன்

முல்லைத்தீவு, ஜயன்கன்குளம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதி ஊடாக கஞ்சாவை கடத்த முற்பட்ட இருவரை ஜயன்கன் குளம் பொலிஸார் திங்கட்கிழமை (16) அன்று கைதுசெய்தனர்.

விசுவமடு கிழக்கு கிளிநொச்சியினை சேர்ந்த 41 அகவையுடைய நபர் ஒருவரும் தர்மபுரம் பகுதியினை சேர்ந்த 32 அகவையுடைய இருவரும் இணைந்து 6 கிலோ கிராம் கஞ்சாவினை கடத்த முற்பட்ட வேளை கைது செய்யப்பட்டனர்.

அவ்விருவரும் மாங்குளம் நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட போது எதிர்வரும் 25 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

## சுயாதீனமாக களமிறங்கும் கேசவ மூர்த்தி

சுதத்.எச்.எம்.ஹேவா

ஹட்டன்- டிக்கோயா நகரசபையின் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினரான எஸ்.கேசவமூர்த்தி, இம்முறை நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஹட்டன்- டிக்கோயா நகரசபைக்காக சுயாதீனமாக போட்டியிடவுள்ளதாகத் தெரிவித்தார்.

தற்போது மக்களிடையே அரசியல்கட்சிகள் தொடர்பில் திருப்தியற்ற நிலை காணப்படுவதால் தான் சுயாதீனமாக போட்டியிட தீர்மானித்ததாகக் குறிப்பிட்டார்.

தேர்தலில் போட்டியிட தனக்கு பல்வேறு கட்சிகளிடமிருந்து அழைப்புகள் வந்துகொண்டிருப்பதாகவும் எனினும் தான் அவற்றை எல்லாம் நிராகரித்து, சுயாதீனமாக போட்டியிடுவதற்காக கட்டுப்பணம் செலுத்தியுள்ளதாகவும் தெரிவித்தார்.

## மாணவர் பாராட்டு விழா

மெய்யன்

பன்விலை- மடுல்கலை நெல்லிமலை சிவனேஸ்வரா தமிழ் வித்தியாலய மாணவர் பரிசளிப்பு விழாவும் சின்னம் சூட்டும் விழாவும் இந்த மாதம் 22 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு பாடசாலை அதிபர் எம்.நவநீதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

மலையக கலாசார ஒன்றியத்தின் அனுசரணையில் நடைபெறும் இந்நிகழ்வில், வத்தேகம கல்வி வலய வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி. டப்ளிவ். எம் .டீ. என் குணரட்ண பிரதம அதிதியாகக் கலந்துகொள்ளவுள்ளார்.

கல்விப் பணிப்பாளர் ஐ.ஹாசிம், மலையக கலாசார ஒன்றியத்தின் தலைவர் கே.ஜே.சிவராஜேஸ்வரன் மற்றும் நிறைவேற்றுக் குழு உறுப்பினர்கள் ஆர். செல்வகுமார், ஏ ஸ்ரீ .குமார் ஆகியோரரும் அயல் பாடசாலை அதிபர்களும் இந்நிகழ்வில் கலந்துகொள்ளவுள்ளனர்.

. இந்நிகழ்வில் பன்விலை கல்விக்கோட்டத்தில் புலமைப்பரிசில் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட மாணவி கி.ஹம்ருத்திரா (181புள்ளிகள்) உள்ளிட்ட பலரும் பாராட்டப்படவுள்ளனர்.

## பொங்கல் விழாவுக்கு விண்ணப்பம் கோரல்

எஸ். கே. குமார்

நுவரெலியா இந்து கலாசார பேரவை வருடம் தோரும் நடத்தப்படும்" பொங்கல் விழா 2023 அடுத்த மாதம் 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நுவரெலியா ஹாவேலியா ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவ் விழாவில் மாக்கோலம், பூக்கோலம், சுவையான பொங்கல் வைத்தல் போட்டிகளுடன், கலை கலாசார நடன, நாடக நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

இப் போட்டிகளில் பங்குகொள்ள விரும்பும் போட்டியாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

அதற்கமைய, மாக்கோலம், பூக்கோலம்,சுவையான பொங்கல் வைத்தல் போன்ற போட்டிகளில் 18 வயதிற்கு மேற்பட்ட ஆண், பெண்கள் பங்குபற்றலாம்.

4*4 அடி சதுரங்களுக்குள் கோலங்கள் அமைத்தல் வேண்டும்.பூக்கோலத்திற்கு தேங்காய்ப்பூ, கோலப்பொடி, அரைத்த அரிசி மா மற்றும் தானியங்கள் பயன்படுத்தலாம்.

மாக்கோலப் போட்டிக்கு அரைத்த அரிசி மா பயன்படுத்தலாம். (கரைத்த மா பயன் படுத்தக்கூடாது).போட்டிகளுக்கான கோலப்பொருட்கள், போக்குவரத்து செலவுகள் வழங்கப்படமாட்டாது. இந்து கலாசார விழுமியங்களை பிரதிபலிப்பனவாக கோலங்கள் அமைத்தல் வேண்டும்.

சுவையான பொங்கல் வைத்தல் போட்டிகளுக்கு பொங்கல் பானை மற்றும் பொங்கல் வைப்பதற்கான பொருட்களை போட்டியாளர்களே கொண்டு வரவேண்டும் பொங்கள் வைப்பதற்கான அடுப்பு, விறகு பேரவையினால் வழங்கப்படும்.

போட்டிகளில் பங்குப்பற்றி 1ஆம்,2ஆம் மற்றும் 3ஆம் இடங்களை வெற்றிக்கொள்ளும் போட்டியாளர்களுக்கு பெறுமதிமிக்க பணப்பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன், போட்டிகளில் பங்குப்பற்றும் அனைவருக்கும் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

விண்ணப்பங்களில் கட்டாயமாக தங்களுடைய தொடர்பிற்கான தொலைபேசி இலக்கத்துடன் எதிர்வரும் 31-1-2023 ஆம் திகதிக்கு முன் கலாசார செயலாளர், நுவரெலியா இந்து கலாசார பேரவை, இலக்கம் 30 , கண்டி வீதி, நுவரெலியா என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.தொடர்புகளுக்கு 0773 179 138, 0789 841 437 அழைக்கவும்.

கொட்டகலை தமிழ் மகா வித்தியாலயத்தில்

# தோட்டப்புற மாணவர்கள் புறக்கணிப்பு

### தீர்மானத்தை எதிர்த்து பெற்றோர் ஆர்ப்பாட்டம்



ரஞ்சித் ராஜபக்ஷ, எஸ்.கணேசன்

நுவரெலியா கல்வி வலயத்தின் கீழ் நிர்வகிக்கப்படும் கொட்டகலை தமிழ் தேசிய வித்தியாலயத்துக்கு தோட்டப்புற மாணவர்களையும் இணைத்துக்கொள்ளுமாறு தெரிவித்து நேற்று (18) காலை பாடசாலைக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

குறித்த பாடசாலையில் 2,000க்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்று வரும் நிலையில், ட்ரேட்டன் தோட்டத்தைச் சேர்ந்த மாணவர்களை அப்பாடசாலையில் இணைத்துக்கொள்ள அதிபர் அனுமதி மறுப்பதாகவும் ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவிக்கின்றனர்.

தமது தோட்டத்தில் பாடசாலையொன்று காணப்படுகின்ற நிலையில், அங்கு கற்றல் செயற்பாடுகள் உரிய முறையில் இடம்பெறுவதில்லை என்றும் எனவே தமக்கு அருகில் இருக்கும் கொட்டகலை தமிழ் தேசிய பாடசாலையில் தமது பிள்ளைகளை இணைத்துக்கொள்ளுமாறு தெரிவித்து



ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது நுவரெலியா கல்வி வலய அதிகாரிகளுக்கும் பாடசாலையின் அதிபர், ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களுக்குமிடையில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றதுடன், உயர்தர பரீட்சைகளின் பின்னர் இந்த பிரச்சினைக்கு தீர்வை முன்வைப்பதாக பாடசாலை தரப்பில் தெரிவித்ததையடுத்து, ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கலைந்துசென்றனர்.







# பொங்கல் விழா

படல்கும்பர பிரதேச செயலகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தைப்பொங்கல் விழா செயலக வளாகத்தில் சிறப்பாக கொண்டாடப்பட்டது. (சுமணசிறி குணதிலக)

## ஹட்டன் பஸ் தரிப்பிடத்தில் நீண்ட வரிசை

ரஞ்சித் ராஜபக்ஷ

தைப்பொங்கல் பண்டிகைக்காக மலையகப் பகுதிகளுக்கு வருகைத் தந்த பெருமளவானவர்கள் மீண்டும் தலைநகர் உள்ளிட்ட தமது தொழில் இடங்களுக்கு திரும்பிச் செல்ல போதிய போக்குவரத்து வசதியின்றி நேற்று (18) ஹட்டன் பஸ் தரிப்பிடத்தில் நீண்ட வரிசைகளில் காத்திருந்தனர்.

தலைநகர் உள்ளிட்ட பல பிரதேசங்களிலிருந்து திரும்பிச் செல்ல போதியளவு தனியார் மற்றும் இ.போ.ச பஸ்கள் சேவையில் ஈடுபடாமை காரணமாக நீண்ட வரிசைகளில் காத்திருப்பதாகத் தெரிவித்தனர்.

இந்த விடயம் தொடர்பில் ஹட்டன் டிப்போவின் முகாமையாளர்



டபிள்யு. ஜி.ஜே.கே. கீர்த்திரத்னவிடம் வினவியபோது,நேற்று முன்தினத்திலிருந்து (17) நேற்று வரை கொழும்புக்கு 22 பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன என்றார்.

தைப்பொங்கலுக்காக மலையகப் பெருந்தோட்டங்களுக்கு வருகைத் தந்த பெரும்பாலானர்கள் ஒரே நாளில் திரும்பிச் செல்வதால் இவ்வாறு நீண்ட வரிசை காணப்படுவதாகவும் தெரிவித்தார்.



தமிழ் மாணவர்களுக்கு

# சிங்கள மொழி தொடர்பான செயலமர்வு

என்.ஆராச்சி

தமிழ்மொழி பாடசாலைகளில் சிங்கள மொழி தொடர்பான ஆர்வத்தை ஏற்படுத்தும் இரண்டு நாள் செயலமர்வு, புளத்கொஹுபிட்டிய கணேசா தமிழ் வித்தியாலயத்தில் நடைபெற்றது.

இதில் குறித்த பாடசாலையில் தரம் 6,7,8இல் கல்வி பயிலும் 100 பேர் வரை கலந்துகொண்டனர்.

புளத்கொஹுபிட்டிய பிரதேச செயலகத்தின் மொழி பிரிவினரால் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யபட்டிருந்ததுடன் இதன் ஆரம்ப நிகழ்வின் பிரதம அதிதியாக புளத்கொஹுபிட்டிய பிரதேச செயலாளர் ரம்யா ஜயசுந்தர கலந்துகொண்டார்.

புளியாவத்தை நகருக்கு

# விரைவில் சதொச விற்பனை நிலையம்

நிலமேகம் பிரசாந்த்



புளியாவத்தை நகரில் சதொச விற்பனை நிலையம் விரைவில் அமைக்கப்பட உள்ளதாக நோர்வூட் பிரதேச சபை உப- தவிசாளர் கிஷோகுமார் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில், புளியாவத்தை பகுதியை பொறுத்த வரை பத்தாயிரத்துக்கும் அதிகமான குடும்பங்கள் வசித்து வருகின்றன. இவர்களில் 90 வீதமானவர்கள் பெருந்தோட்ட தொழிலாளர்கள். இன்றைய பொருளாதார சூழ்நிலையில் அவர்கள் அரசினால் வழங்கப்படும் நிவாரணமாக கிடைக்கக்கூடிய பொருட்களை பெற்றுக் கொள்வதற்காக ஹட்டன் நகரில் உள்ள சதொச விற்பனை நிலையத்திற்கு செல்ல வேண்டிய நிலை உள்ளது.

அதுமட்டுமல்லாது நகர கடைகளை விட பொருட்களின் விலை சற்று குறைவாக சதொச நிறுவனத்திலேயே பெற்றுக்கொள்ள முடியும். இவ்வாறு ஹட்டன் நகருக்கு செல்வதன் ஊடாக பிரதேச மக்கள் போக்குவரத்துக்காக பெருமளவு பணம் செலவிட வேண்டிய நிலை ஏற்படும்.

இது தொடர்பாக நோர்வூட் பிரதேச சபை உபதவழசாளர் என்ற ரீதியிலும் புளியாவத்தை வட்டார பொறுப்பாளர் என்ற ரீதியிலும் ஜனாதிபதிக்கு கடிதம் மூலமாக அறிவித்திருந்ததாக குறிப்பிட்டார்.

இந்நிலையில் ,ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இது தொடர்பாக ஜனாதிபதி செயலகம் துறைசார் அமைச்சர் நளின் பெர்ணான்டோ புளியாவத்தை நகரில் சதொச விற்பனை நிலையத்தை அமைக்க மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பணிப்புரை விடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கொரியாவிலிருந்து கிடைத்த மருந்துப்பொருள்களை

# வடிவேல் எம்.பி கையளித்தார்





World Unreached people missions பூரண அனுசரணையில் கொரிய நாட்டில் இருந்து அன்பளிப்பாக கிடைக்கபெற்ற 43 கோடி ரூபாய் பெறுமதியான மருந்துப் பொருட்கள் நேற்று முன்தினம் (17) சுகாதார அமைச்சிடம் கையளிக்கப்பட்டது.

நாட்டின் பல பிரதேசங்களில் மருத்துவ பொருட்களுக்கு தட்டுப்பாடு நிலவும் சூழ்நிலையில், வைத்திய அதிகாரிகளும் சுகாதாரத்துறை சார்ந்த பணியாளர்களும் ஆங்காங்கே போராட்டங்களில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றார்கள். அத்தியாவசிய மருந்து பொருட்களுக்கு தட்டுப்பாடு நிலவுவதால் நோயாளிகள் பல இன்னல்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய துர்பாக்கிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

இவற்றைக் கருத்தில் கொண்டு போதகர் பிரான்சிஸ் மற்றும் பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் ஆகியோரால் மேற்கொள்ளப்பட்ட முயற்சியின் பயனாக 43 கோடி ரூபாய் பெருமதியான மருந்து பொருட்கள் மற்றும் நவீன மருத்துவ சாதனங்கள் கொரிய நாட்டில் இருந்து இலங்கைக்கு வரவழைக்கப்பட்டது.

இவ் மருத்துவ பொருட்கள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் சுகாதார அமைச்சில் சுகாதார அமைச்சரிடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டது.

பெருந்தோட்டத்தை சார்ந்த வைத்தியசாலைகளுக்கு மருந்து பொருட்கள் பகிர்ந்தளிக்க ப்படவுள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

# பாதைக்காக சமையல் செய்து ஆர்ப்பாட்டம்

நடராஜா மலர்வேந்தன், ராமு தனராஜா

மடுல்சீமை-மஹதோவ லோவர் டிவிசன் மக்கள் இன்று காலை தொடக்கம் ஆர்ப்பாட்டம் ஒன்றில் ஈடுபட்டனர்.

மஹதோவையிலிருந்து லுணுகலை வரையான 7 கிலோ மீற்றர் வீதியை புனரமைத்து தருமாறு தெரிவித்து, நேற்று (18) காலை சுமார் 300 இற்கும் மேற்பட்டவர்கள் இவ் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

மஹதோவையிலிருந்து லுணுகலை வரையான குறித்த 7 கிலோ மீற்றர் வீதியை சுமார் 1000 குடும்பங்களை சேர்ந்தவர்கள் பயன்படுத்துவதுடன், பாடசாலையொன்றும் அங்கு காணப்படுகின்றது.

இந்நிலையில், முன்னாள் ஊவா மாகாணசபை அமைச்சர் செந்தில் தொண்டமான், பாராளுமன்ற உறுப்பினர்களான வடிவேல் சுரேஷ், சாமர சம்பத் தஸநாயக்க ஆகியோர் இணைந்து இந்த வீதியின் புனரமைப்பு பணிகளுக்கான அடிக்கல்லையும் நாட்டி வைத்துள்ளனர்.

எனினும், வீதி புனரமைப்பிற்கான வேலைகள் தொடங்கப்பட்டு தற்போது வேலைகள் இடைநிறுத்தப்பட்டு வீதி கைவிடப்பட்டுள்ளதாக அப்பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே, விரைவாக குறித்த வீதியை புனரமைத்து தருமாறு வலியுறுத்தி பசறை- மடுல்சீமை வீதியை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதால்,குறித்த வீதியுடனான வாகன போக்குவரத்து தடைப்பட்டிருந்ததுடன், ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் அந்த இடத்திலேயே சமையல் நடவடிக்கையும் ஆரம்பித்தனர்.



# மருந்து தட்டுப்பாடும் அவதியுறும் இரு தரப்பினரும்

தங்களைத் தேடிவரும் நோயாளர்களை குணப்படுத்தவேண்டிய தார்மீக கடப்பாடும் அர்ப்பணிப்பும் வைத்தியர்களுக்கு இருக்கிறது. ஒரு நிமிடத்திலேனும் உயிரைக் காக்கவேண்டும். வைத்தியரிடம் சென்றால், இன்னும் கொஞ்ச நாளைக்காவது வாழமுடியும் என நோயாளர்களும் அவர்களைச் சார்ந்திருப்போரும் வேண்டிக்கொள்வர்.

நிலைமை எல்லையைத் தாண்டி சென்றுவிட்டால், தாங்கள் வழிபடுகின்ற கடவுள்களிடம் பாராத்தை போட்டுவிட்டு உறவினர்கள் ஒதுங்கிச் சென்றுவிடுவர். எனினும், வைத்தியத்துறையைச் சார்ந்தவர்கள் இறுதி நிமிடம் வரையிலும் முயற்சி செய்துகொண்டே இருப்பார்கள்.

உயிர்களைக் காப்பாற்றவேண்டுமாயின், அதற்குத் தேவையான மருந்துகள், குளிசைகள் மற்றும் உபகரணங்கள் எச்சந்தர்ப்பத்திலும் கையில் கட்டாயமாக இருக்கவே வேண்டும். இல்லையேல், வைத்தியர்களையும் கைகளை விரிக்கவேண்டிய நிலைமை ஏற்படும்.

ஒவ்வொரு துறைகளும் ஏதோவொரு துறையை விஞ்சியே நிற்கும். நாளைக்கு செய்துக்கொள்ளலாம் என்று ஒத்திப்போடுவதற்கென சில துறைகள் இருக்கின்றன. இந்த நிமிடமே செய்துவிடவேண்டும் என்பது வைத்திய துறைக்கே உரிய பண்பாகும். அதனால்தான் என்னவோ, தான் உடுத்தியிருந்த உடையுடன் வைத்தியசாலைக்கு வந்த வைத்தியர், சத்திர சிக்கிச்சையை மேற்கொண்டு மூன்று உயிர்களை அண்மையில் காப்பாற்றியிருந்தார்.

இந்த சம்பவம், பதுளை வைத்தியசாலையில் இடம்பெற்றிருந்தது என்பதை யாவரும் அறிவார்கள். அந்த வைத்தியசாலையில் தேவையான உபகரணங்கள், மருந்துகள் இருந்தமையால் மூன்று உயிர்களையும் காப்பாற்ற முடிந்தது. தட்டுப்பாடு ஏற்பட்டிருந்தால், வேறு வைத்தியசாலைகளுக்கு அவர்களை அனுப்பியிருக்கவேண்டும். நேரம் தவறியிருந்தால் அந்த உயிர்களை காப்பாற்றியிருக்க முடியாத நிலைமையும் ஏற்பட்டிருக்கலாம்.

எமது நாட்டைப் பொறுத்தவரையில் மருந்துகளுக்குத் தட்டுப்பாடு பெரும் பிரச்சினையாக இருக்கிறது. அந்தத் தட்டுப்பாட்டை நிவர்த்திக்கக் கோரி, வைத்தியர்கள் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டுள்ளனர்.

அத்துடன், பதிவுச் செய்யப்படாத நிறுவனங்களில் இருந்து குறைந்த விலைக்கு தரமற்ற மருந்துகளை,அரசாங்கம் கொள்வனவுச் செய்கின்றது என்றக் குற்றச்சாட்டுகளும் முன்வைக்கப்படுகின்றன. வைத்தியசாலையில் தங்கியிருக்கும் நோயாளர்கள் மற்றும் வெளிநோயாளர்களுக்கு எவ்விதமான இடையூறுகளும் ஏற்படாத வகையிலேயே இந்தக் கவனயீர்ப்பு போராட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

போராட்டங்களில் ஈடுபடும் வைத்தியர்களை நோயாளர்களும் அவர்களுடைய உறவினர்களும் கடந்த காலங்களில் திட்டியிருக்கலாம். சம்பள அதிகரிப்பு, மேலதிக கொடுப்பனவு உள்ளிட்ட தங்களுக்குத் தேவையானதை பெற்றுக்கொள்ளும் வகையிலேயே போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

ஏனைய உரிமை போராட்டங்களை இரும்பு கால்களைக் கொண்டு அடக்குவதைப் போல, வைத்தியர்களின் போராட்டங்களை அடக்குவதற்கு முயற்சிக்கக்கூடாது.

வைத்தியர்களின் கவனயீர்ப்பு போராட்டம், நோயாளர்களை காப்பாற்றுவதற்கானது என்பதையும் நினைவில் கொண்டு, அவர்களின் கோரிக்கைகளுக்கு செவிமடுத்து, பிரச்சினைகளை துரிதமாக தீர்த்து வைக்கவேண்டியது அரசாங்கத்தின் கடப்பாடாகும்.


## தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk



தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.



அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




# விக்கி: நம்பிக்கைகளை சிதைக்கும் அவசர நாயகன்!



புருஜோத்தமன் தங்கமயில்

“கைகளின் இரத்தக் கறை உள்ளவர்களுடன் என்னை என்னால் இணைத்துப் பார்க்க முடியாது; தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றில் இணைய வேண்டுமாக இருந்தால் தமிழரசுக் கட்சியில் இணைவேன்...” என்று சி.வி.விக்னேஸ்வரன் வடக்கு மாகாண முதலமைச்சராக பதவியேற்ற சில மாதங்களில் தெரிவித்த விடயம் பெரும் சர்ச்சையானது. இரா.சம்பந்தன் தலைமையில் இடம்பெற்ற கூட்டமைப்பின் பங்காளிக் கட்சித் தலைவர்கள், முக்கியஸ்தர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே விக்னேஸ்வரன் மேற்கண்டவாறு கூறினார். அப்போது, கூட்டமைப்பின் பேச்சாளராக ஈ.பி.ஆர்.எல்.எப். அமைப்பின் தலைவரான சுரேஷ் பிரேமச்சந்திரன் இருந்தார். அவர், விக்னேஸ்வரனின் கூற்று, தமிழ் மக்களின் கூட்டமைப்பிற்கு வழங்கிய ஆணையையும், ஈபிஆர்எல்எப், ரெலோ, புளொட் உள்ளிட்ட கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளையும் அவமதிப்பதாகவும் கண்டனம் வெளியிட்டிருந்தார்.

முன்னாள் ஆயுதப் போராட்டங்கள் குறித்து இரத்தக்கறை விமர்சனம் வெளியிட்ட விக்னேஸ்வரன், இப்போது ஜனநாயகப் போராளிகள் கட்சியினரை பார்த்து அரச புலனாய்வாளர்களோடு தொடர்புகளைப் பேணுபவர்கள் என்று குற்றஞ்சாட்டியிருக்கிறார். அதனால், ஜனநாயகப் போராளிகள் அங்கம் வகிக்கும் தேர்தல் கூட்டில் தன்னால் இணைந்து கொள்ள முடியாது என்றும் அவர் தெரிவித்திருக்கின்றார்.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தனித்து நின்று களம் காண்பது என்று தமிழரசுக் கட்சி முடிவு எடுத்தது. அதனால், கூட்டமைப்பின் வீட்டுச் சின்னத்தில் தொடர்ந்தும் போட்டியிட முடியாது என்கிற சிக்கல் ரெலோவுக்கும் புளொட்டுக்கும் ஏற்பட்டிருக்கின்றது. அதனால், கூட்டமைப்பினர் தாங்களே என்ற கோரிக்கையோடு புதிய கூட்டொன்றை அமைத்திருக்கிறார்கள். இந்தக் கூட்டணி, புளொட்டின், இன்னொரு கட்சியான ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி என்கிற பெயரில் குத்து விளக்குச் சின்னத்தில் போட்டியிடப் போகின்றது. இந்தக் கூட்டுக்கான ஆரம்ப கட்டப் பேச்சுக்களில் விக்னேஸ்வரன் இணைந்து கொண்டிருந்தார். அவர், புதிய கூட்டணியின் தலைமைத்துவமும், அதன் ஒட்டுமொத்த கையாளுகைக்கான அதிகாரம் தனக்கு கிடைக்கும் என்று நம்பினார். ஆனால், தமிழரசுக் கட்சி கூட்டமைப்புக்குள் ஏக அதிகாரத்தோடு நடந்து கொண்டது போல, புதிய கூட்டணிக்குள் எந்தவொரு தரப்பும் நடந்து கொள்வதற்கு அனுமதிப்பதில்லை என்று ரெலோ, புளொட், ஈபிஆர்எல்எப் கட்சிகள் தீர்மானித்தன. அதனால், விக்னேஸ்வரனுக்கு புதிய கூட்டணியில் தனக்கான அதிகார இடம் கேள்விக்குள்ளானது. அதனால், அவர் புதிய கூட்டணியில் இணையவில்லை. இந்த நிலையில்தான், புதிய கூட்டணியில் ஏன் இணையவில்லை என்று ஊடகங்களுக்கு விளக்கமளிக்கும் போது விக்னேஸ்வரன், ஜனநாயகப் போராளிகளை அரச புலனாய்வர்கள் போன்றதொரு தோற்றப்பாட்டை வெளிப்படுத்தினார்.

விக்னேஸ்வரன் தமிழ்த் தேசிய அரசியலுக்கு வந்து இந்த ஆண்டோடு பத்து வருடங்களாகிறது. இந்தக் காலப்பகுதிக்குள் அவரை உச்சத்தில் ஏற்றிவிட்ட அனைத்துத் தரப்பினரையும் அவர் ஏமாற்றியிருக்கிறார். அதுவும், அந்தத் தரப்பினரை மிக மோசமாக குற்றச்சாட்டுக்களை சுமத்தி விமர்சித்து தன்னை நியாயமானவராக காட்ட முயற்சி செய்திருக்கிறார். விக்னேஸ்வரனை, கூட்டமைப்பின் பங்காளிக் கட்சித் தலைவர்களின் எதிர்ப்புக்களைச் சமாளித்து இரா.சம்பந்தனும், எம்.ஏ.சுமந்திரனும் வடக்கு முதலமைச்சர் வேட்பாளராக அரசியலுக்குள் அழைத்து வந்தார்கள். முதலமைச்சர் பதவி ஏற்றதும், விக்னேஸ்வரன் சம்பந்தனுக்கு நிகரான தலைவராக தன்னை எண்ணத் தொடங்கினார். சம்பந்தனின் காலத்துக்குப் பின்னார், அந்த இடம் தனக்குரியது, அதற்கு தானே தகுதியானவன் என்று நம்பினார். தமிழரசுக் கட்சியின் தலைமைத்துவத்தில் இருந்து சம்பந்தன் விலகும் போது, அந்தப் பதவி தனக்கு அளிக்கப்பட வேண்டும் என்று அவர் விரும்பினார். ஆனால், தமிழரசுக் கட்சியின் தலைமைத்துவத்தை மாவை சேனாதிராஜாவிடம் வழங்கிவிட்டு, கூட்டமைப்பின் தலைவராக மாத்திரம் இருக்கும் முடிவுக்கு சம்பந்தன் வந்தார். அதனை, விக்னேஸ்வரனால் ஏற்க முடியவில்லை. அதுவரை காலமும் கூட்டமைப்பின் பொது (முதலமைச்சர்) வேட்பாளராக இருந்தாலும், விக்னேஸ்வரன், தன்னை தமிழரசுக் கட்சியோடுதான் இணைத்துப் பார்த்தார். அனால்தான், இரத்தக்கறை படிந்தவர்களோடு தன்னால் இணைய முடியாது என்று கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளை அவமதிக்கவும் செய்தார்.

தமிழரசுக் கட்சியின் தலைமைத்துவம் என்கிற விக்னேஸ்வரனின் எதிர்பார்ப்பு சாத்தியமாகத புள்ளியில், அவர் கூட்டமைப்பு மீதான விமர்சனங்களை மெல்ல மெல்ல விடுக்கத் தொடங்கினார். இனியும் கூட்டமைப்புக்குள் இருந்தால் சம்பந்தனுக்கு நிகரான இடத்தை அடைய முடியாது என்கிற நிலையில், தனி ஓட்டத்துக்காக அவர் தயாரானார். அப்போதுதான் கூட்டமைப்புக்கு மாற்றான தலைமைத்துவம் தமிழ்த் தேசியப் பரப்பில் உருவாக்கப்பட வேண்டும் என்கிற வேட்கையோடு இயங்கிய தரப்புக்கள், விக்னேஸ்வரனை அந்த இடத்தில் பொருத்திப் பார்க்க விரும்பின. அதனால் தமிழ் மக்கள் பேரவை என்கிற அமைப்பினை உருவாக்கினார்கள். கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தொடங்கி கூட்டமைப்புக்கு மாற்றான தரப்புக்களாக முன்னிறுத்திய பலரும் விக்னேஸ்வரனின் தலைமைத்துவத்தை ஏற்பதாக அறிவித்து 2015 பிற்பகுதியில் ஒன்றுகூடின. கிட்டத்தட்ட தான் சம்பந்தனுக்கு நிகரான தலைவராக உருவாகிவிட்டதாக விக்னேஸ்வரன் நம்பினார். பேரவைக்குள் இருந்த கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மற்றும் சுரேஷ் பிரேமச்சந்திரனின் ஈபிஆர்எல்எப் ஆகியவற்றின் ஆதரவாளர்கள் தொடர்ச்சியாக மேற்கொண்ட பிரச்சாரப் பயணத்தின் மூலம் எழுக தமிழ் என்கிற பேரணிகள் ஊடாக மாற்றுத் தலைமையாக தன்னை விக்னேஸ்ரன் முன்னிறுத்தினார். ஆனால், அப்போதும் அவர் வடக்கு மாகாண முதலமைச்சர் பதவியை பற்றிக் கொண்டிருந்தார்.

நல்லாட்சிக் காலத்தில் கிடைத்த ஜனநாயக இடைவெளியைப் பயன்படுத்தி தமிழ்த் தேசியப் பரப்பில் பலமான மாற்றுத் தலைமைத்துவமொன்று கட்டமைக்கப்பட வேண்டும் என்பது தமிழ் மக்களின் எதிர்பார்ப்பு. ஆனால், அதனை யாழ் மையவதாக அரசியல் ஆய்வாளர்கள், புலமையாளர்களைக் கொண்ட தமிழ் மக்கள் பேரவை சிதைத்தது. இயல்பாக உருவாக வேண்டிய மாற்றுத் தலைமையை, அவசர அவசரமாக விக்னேஸ்வரனைக் கொண்டு நிரப்ப முயன்றது. விக்னேஸ்வரன் அப்போதுதான் தமிழ்த் தேசிய அரசியலின் அரிச்சுவடியைப் படித்துக் கொண்டிருந்தார். அவரின் தலைமையில் மாற்றுத் தலைமை என்கிற பெரும் பாரம் ஏற்றப்பட்டது. அதற்கு, கஜேந்திரகுமாரும், சுரேஷும், த.சித்தார்த்தனும் துணையாக இருந்தார்கள். விக்னேஸ்வரனை பெருந்தலைவராக முன்னிறுத்தி நாளொரும் வண்ணமும் பொழுதொரு மேனியுமாக அரசியல் ஆய்வுகள் எழுதப்பட்டன. பெரும் பிம்பம் கட்டமைக்கப்பட்டது. ஆனால், மண் குதிரையை நம்பி பெரும் தடைகளைத் தாண்ட முடியாது என்று இந்தப் பத்தியாளர் உள்ளிட்ட சிலர் சுட்டிக்காட்டினார்கள். ஆனால், அப்போது அது கண்டுகொள்ளப்படவில்லை.

ஆனால், கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல் காலத்திலேயே விக்னேஸ்வரன் ஒரு மண் குதிரை என்பதும் பதவிகள் மீது பேராசை கொண்டவர் என்பதுவும் வெளிப்பட்டுவிட்டது. கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் விக்னேஸ்வரனை முன்னிறுத்திக் கொண்டு கஜேந்திரகுமார், சுரேஷ் உள்ளிட்ட கட்சிகளை உள்ளடக்கிய பரந்து பட்ட கூட்டணியை அமைக்க தமிழ் மக்கள் பேரவை முயன்றது. ஆனால், அப்போது, விக்னேஸ்வரன் முதலமைச்சர் பதவியை மீதான பற்றினால் அவற்றை நாசமாக்கினார். அதனால், பேரவை அமைக்க நினைத்த பரந்து பட்ட கூட்டணி சாத்தியமில்லாமல் போனது. அத்தோடு, பேரவைக்குள் அதுவரை அண்ணனும் தம்பியுமாக இயங்கிய சுரேஷும் கஜேந்திரகுமாரும் குடுமிப்பிடி சண்டை போட்டு பிரிந்து கொண்டார்கள். ஒரு கட்டம் வரையில் கூட்டமைப்பையே அச்சுறுத்தும் அளவுக்கு எழுந்து வந்த பேரவை, கலகலத்து காணாமற்போனது. விக்னேஸ்வரன் முதலமைச்சர் பதவிக் காலம் முழுவதையும் பூர்த்தி செய்துவிட்டு, அடுத்த நாள் புதிய கட்சியைத் தொடங்கினார். அதுதான், தமிழ் மக்கள் பேரவையின் இறுதி நாள்.

கூட்டமைப்போடு முரண்பட்ட தரப்புக்கள் கடந்த பொதுத் தேர்தலில் விக்னேஸ்வரன் தலைமையில் கூட்டணி அமைத்தன. விக்னேஸ்வரனை வெற்றிபெறவும் வைத்தன. அத்தோடு, அந்தக் கூட்டணியும் கலைந்து போனது. இப்போது, விக்னேஸ்வரனோடு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மணிவண்ணன் தரப்பு இணைந்து கொண்டிருக்கின்றது. அடுத்த பொதுத் தேர்தலில் வெற்றிபெறுவதற்கு, மணிவண்ணனின் ஆதரவுத் தளம் தனக்கு உதவும் என்று விக்னேஸ்வரன் நினைக்கிறார். அதனால், தன்னை ஏக தலைவராக ஏற்றத் தயாராக இல்லாத, ரெலோ, புளொட், ஈபிஆர்எல்எப்பை அவர் உதறித் தள்ளியிருக்கிறார். விக்னேஸ்வரன் இருக்கிறார் என்று நம்பி தமிழரசுக் கட்சியை எரிச்சலூட்டிய ரெலோவும், புளொட்டும் இப்போது கிட்டத்தட்ட நடுத்தெருவில் நிற்கும் நிலை வந்திருக்கிறது. அவர்கள், தங்களை கூட்டமைப்பாக முன்னிறுத்தினாலும், அவர்களின் புதிய பாதையை மக்கள் அங்கீகரிப்பதற்கான வாய்ப்புக்கள் மிகவும் குறைவு. கடந்த காலத்தில் வீட்டுச் சின்னத்தில் பெற்ற வெற்றியை அடையும் வாய்ப்பில்லை.

தமிழ்த் தேசிய அரசியலில் விக்னேஸ்வரனை நம்பி கெட்டவர்கள் என்கிற அணியை அமைத்தால், அதற்குள் சம்பந்தன், சுமந்திரன் தொடக்கம் கஜேந்திரகுமார் ஈறாக, அனைத்து தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்களும், தரப்புக்களும் அடங்குவார்கள் என்பது காலத்தின் பதிவு.



## வாழ்வியல் தரிசனம்

ஒருவரின் அல்லது பலரின் சுயமதிப்பை உடைப்பதற்கு என்றே சில விசமிகள் காத்திருக்கின்றார்கள். பொறாமை காரணமாக, பிறர் பற்றி அவதூறு பேசுவதையே குறியாகக் கொண்டிருப்பவர்கள் சமூக விரோதிகளாவர். ஷ

வேண்டுமென்றே அபாண்டமான செய்திகளைப் பரப்புவது, பிறர் குடும்டப விடயங்களில் தலையிடுவது, வதந்தி பரப்புவது, எல்லாமே நடந்தபடிதான் இருக்கும். செவிகளைக் கண்டபடி நகர்த்தலாகாது. எல்லா விதமான மாந்தர்களும் எங்கள் முன்னால் உலாவருகின்றார்கள்.

எவருடன் நட்புக் கொள்வது? எவரைக் கண்டுகொள்ளாமல் விடுவது என்பதை உங்கள் அனுபவ ஞானம் மூலம் கண்டுகொள்ள முடியும். காலங்களைச் சரிவரப் பயன்படுத்த வேண்டும். மனிதன் மனிதனையே விழுங்குகின்ற காலம் இது. தங்கள் சுயநலத்துக்காக எதையும் செய்வார்கள்.

ஒருவரின் ஆளுமைகளை அனுபவங்களே சொல்லிக் கொடுக்கின்றன. இயற்கையாகவே மனிதர்களுக்கு புத்தி உண்டு; சிந்திக்கும் திறனும் உண்டு. நிதானம், ஆராய்வு, செயல் மாந்தர்களுக்கு பிரதானமானது.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### வெள்ளம் வழிந்தோட வேண்டும்

முல்லைத்தீவு செல்வபுரம் கிராமத்தின் வெள்ளம் வழிந்தோடுவதற்கு அதிகாரிகள் வழியேற்படுத்த வேண்டும் என மக்கள் தெரிவிக்கின்றனர்.

மழை காலத்தில் வீதிகளில் பெருமளவு வெள்ளம் தேங்கி நிற்பதன் காரணமாக கிராமத்தின் மக்கள் போக்குவரத்தில் ஈடுபடுவதில் நெருக்கடிகளை எதிர்கொள்கின்றனர்.

குறிப்பாக முல்லைத்தீவு மகா வித்தியாலயம் வட்டுவாகல் பாடசாலைக்குச் செல்லும் மாணவர்கள் தமது பாதணிகளை மழை வெள்ளத்தில் நனைத்தபடி செல்வதன் காரணமாக நோய்த் தொற்றுக்கு உட்படுவதாக பெற்றோர்கள் தெரிவிக்கின்றனர்.

500 வரையான குடும்பங்கள் வாழ்கின்ற இக்கிராமத்தில் கடந்த பத்தாண்டுகளில் வெள்ளம் வழிந்தோடுவதற்கான நிரந்தர தீர்வுகள் காணப்படவில்லை. வட்டுவாகல் ஆறு, பெருங்கடல் என்பவற்றிற்கு வெள்ளம் வழிந்தோடக் கூடிய வாய்க்கால்கள் அமைக்கப்பட வேண்டும். இதற்கான வழிகளை முல்லைத்தீவு மாவட்டச் செயலகம் மேற்கொள்ள வேண்டும்.

மழை பெய்கின்ற போது வீதிகளிலேயே வெள்ளம் தேங்கி நிற்பதனால் நோய்கள் பரவக் கூடிய அபாய நிலை காணப்படுகின்றது. நோய்த் தாக்கங்களில் இருந்து தற்பாதுகாத்துக் கொள்ளுங்கள் என தெரிவிக்கும் அதிகாரிகள் வெள்ளம் வழிந்தோடுவதற்கான வழிகளையும் உருவாக்க வேண்டும்.

குறிப்பாக கரைதுறைபற்று பிரதேச சபை வெள்ளம் தேங்குகின்ற போது வழிந்தோடுவதற்கான வழிகளை உருவாக்க வேண்டும் எனவும் மக்கள் தெரிவிக்கின்றனர்

நடராசா கிருஸ்ணகுமார்




# இவ்வாண்டின் வல்வை பட்டத்திருவிழா



தே.கவினயா
(நான்காம் வருடம் ஊடகக்கற்கைகள் துறை யாழ்ப்பாண பல்கலைக்கழகம்)

அதிகரித்து வந்த கொரோனா பெருந் தொற்று காரணமாக இடைநிறுத்தப்பட்டு இருந்த வல்வெட்டித்துறை பட்டத்திருவிழா இம்முறை வழமை போல தைப்பொங்கல் தினத்தன்று வல்லவை விக்னேஸ்வரா சனசமூக சேவா நிலையத்தின் ஏற்பாட்டில் உதயசூரியன் திடலில் நாடாத்தப்பட்டது.

இந்தாண்டும் அதிகளவிலான மக்கள் வருகை தந்ததன் காரணமாக ஊரணியிலே வாகனங்கள் நிறுத்தி விட்டு வல்வெட்டித்துறை கடற்கரைக்கு நடந்து சென்று வானை அலங்கரிக்கும் பட்டங்களினை கண்டுகழித்தார்கள். பட்டம் விடுவது என்பது மகிழ்ச்சியை ஏற்படுத்துகின்றது என்பதையும் தாண்டி நம்மவரின் பாரம்பரிய விளையாட்டு என்பதனை மறுத்துவிடமுடியாது.





பட்டப் போட்டியினை நடாத்துவதற்குரிய காலப்பகுதியாக வாடைக்காற்றின் இறுதிக் காலமான தைமாதத்தினையே தெரிவு செய்கின்றார்கள். காரணம் வாடைக்காற்றின் ஆரம்பகாலம் மழை என்பதனால் அது பட்டம் ஏற்றுவதற்கான காலமாக இருக்காது.

2023இற்கான பட்டத்திருவிழா போட்டியில் பங்குபற்றிய போட்டியாளர் ஒருவர் இது தொடர்பாக தனது கருத்தினையும் அனுபவத்தினையும் பகிர்ந்து கொள்கையில், பட்டப் போட்டியில் வெற்றி பெறுகின்றோமோ இல்லையோ பட்டம் ஒன்றினை வடிவமைத்து வானில் பறக்கவிடும் போது நாமும் சேர்ந்தே பறப்பது போன்ற பரவசமும், பூரிப்பும் ஏற்படுகின்றது. பட்டத்திருவிழா வருகின்றது என்றாலே நானும் எனது நண்பர்களுக்கும் ஆரவாரத்துடன் பட்டம் வடிவமைப்பதற்கான பேச்சினையும், வேலைகளையும் ஆரம்பித்து விடுவோம்.

பட்டத்திருவிழா ஆரம்பித்த காலங்களில் போட்டி குறைந்தளவில் தான் இருந்தது. அச் சமயங்களில் தற்போது ஏற்றப்படுகின்றது போன்ற ராட்ச்சத பட்டங்கள் ஏற்றப்படுவதில்லலை. வௌவால், கொக்கு, பராந்து, கட்டுக்கொடி, பெட்டிப்பட்டம் போன்ற பட்டங்களே வானில் பறக்கவிடப்படும். எனக்கு தெரிந்து 2011ஆம் ஆண்டுகளின் பின்னே தமிழர்களின் பாரம்பரியமான பட்டம் கட்டும் கலை அழிந்துவிடக்கூடாது என்ற நோக்கத்துடன் பட்டத்திருவிழா பெரியளவில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

முப்பரிமாண பட்டங்களினை கட்டுவதற்கு சில நாட்களும், குறித்தளவிலான பணமும் தேவைப்படுகின்றது. இந்தாண்டில் உழவு இயந்திரம், வைரமோதிரம், வானொலி, வானூர்தி, பொம்மைகள், கப்பல்கள், பீரங்கி, ராகன், கழுகு போன்ற உருவங்களில் பட்டங்கள் ஏற்றப்பட்டிருகின்றது. அதே போல முதலில் என்ன வடிவான பட்டத்ததை உருவாக்கப் போகின்றோம் என்பதனை கலந்து பேசி முடிவுசெய்த பின்னர் பட்டம் கட்டுவதற்கான ஆரம்பகட்ட பணியினை ஆரம்பிப்போம். பட்டங்களினை கட்டுவதற்கு மூங்கில்கள், காய்ந்த தென்னம் மட்டைகள், கமுகம் தடிகள் போன்றவற்றை பயன்படுத்துகின்றோம். மூங்கில்களினை வளைத்து நூலினால் இறுக்கமாக கட்டி முப்பரிமாண வடிவில் பட்டங்களினை தயார்செய்து கொள்கின்றோம். இதற்காக பட்டத்தின் அளவினை பொறுத்து தையல்நூல், தங்கூசி நூல், நைலோன்நூல், கயிறு போன்றவற்யை பயன்படுத்துகின்றோம். பட்டங்களை முழுமைப்படுத்த வர்ண ரிசுகள், பொலித்தீன்கள், வேறு சில பொருட்கள் பயன்படுத்துகின்றோம். பட்டத்திற்கு ';விண்' எனப்படும் ஒலியினை உருவாக்குவதற்கு ஆரம்பத்தில் காயாத பனம் மட்டையின் நார், கண்ணாடி மற்றும் குழாய்கள் பயன்படுத்துகின்றது.

பட்டங்களின் வளர்ச்சி படியின் இன்னோர் கட்டம் லைற்று பட்டங்கள் ஆகும். அதாவது பல வர்ண மின்குமிழ்களினை பொருத்தி பட்டங்களினை வானில் பறக்கவிடுதலாகும். மின்குமிழ்கள் பொருத்தப்பட்ட பட்டங்கள் வானில் பறக்க விடப்பட்டு மின்குமிழ்கள் ஒளிரவிடப்படும். இதற்கு தேவையான வயர் பட்டத்தின் நூல் வழியாக இணைக்கப்பட்டிருக்கும். காற்றில் விண்ணின் சத்தம் எழும்பியவாறு மின்குமிழ்கள் ஒளிர வானில் ஏற்றப்படும் பட்டங்கள் இரவு பொழுதுகளில் பார்ப்பதற்கு தனி அழகு என்று தான் கூற வேண்டும்.


முப்பரிமாண பட்டங்களினை செய்வது அவ்வளவு இலகுவானதல்ல. இவ்வாறான பட்டங்களினை கட்டுவதற்கென்று கைத்திறமை இருக்கவேண்டும். முப்பரிமாண பட்டங்களில் நுணுக்கமான வேலைப்பாடுகள் அதிகளவில் காணப்படுகின்றது, அதிக கனம் கூடிய பட்டங்களை வானில் பறக்கவிட இயலாது அதேசமயம் பட்டம் கட்டும் போது பட்டங்களிற்கான முச்சையையும் சரியாக இடவேண்டும். சாதாரணமான பட்டங்களுக்கு வால் இருக்கும் ஆனால் இவ்வாறான ராட்சத பட்டங்களுக்கு வால் இருப்பதில்லை. பட்டத்தில் சிறிய அளவிலான பிழை இருப்பினும் கூட காற்றில் சரிசமனாக பட்டம் பறக்காது. போட்டியாளர்கள் இவற்றை கருத்தில் கொண்டு பட்டங்களினை செய்து பட்டப்போட்டியில் கலந்துகொள்கின்றார்கள்.

இவர்களில் பலர் பரம்பரை பரம்பரையாக பட்டம் கட்டத் தெரிந்தவர்கள் ஆவர். பட்டம் கட்டுவதனை தொழிலாக செய்யாவிட்டாலும் போட்டியில் கலந்து கொண்டு பரிசில்களை தட்டி செல்லுகின்றார்கள். அதாவது போட்டியினை தமது திறமையை வெளிப்படுத்தும் களமாக பார்ப்பதோடு நிறுத்திக் கொள்கின்றார்கள்.

வல்வை பட்டத்திருவிழாவில் கலந்து கொண்ட போட்டியாளர் கூறியது போல போட்டியில் வெல்பவர்களுக்கு பணப்பரிசில்களும், தங்கநாணயமும் கொடுக்கப்படுவது வழமை. அந்தவகையில் இந்தாண்டும் பட்டத்pருவிழாவில் தொடர்ந்து ஐந்து வருடங்களாக முதலிடத்தை தக்கவைத்த ஒருவரே இவ்வருடமும் முதலிடத்தை தட்டிச் சென்றிருகின்றார். தமது பட்டங்களிற்கு பெயர் சூட்டி, பட்டங்களில் வாசகங்களை எழுதி பறக்கவிடுகின்றார்கள். இவை சமூக நலன் மற்றுமு; பண்பாடு, பாரம்பரியத்தை வெளிப்படுத்துவதாக அமைந்து காணப்படும். பண்பாட்டினை நினைவு கூறும் வல்வை பட்டத்திருவிழா நம்மவர்களிடையே ஒரு சிறப்பாக அம்சமாகவே பார்க்கப்பட்டு வருகின்றது.

பாதுகாவலர் துன்புறுத்தல்:

# 17 கி.மீ. நடந்து சென்று புகார் அளித்த மாணவிகள்



பாடசாலை மாணவிகளில் 60 க்கும் மேற்பட்டோர், நள்ளிரவு வேளை 17 கீலோமீற்றர் நடந்து சென்று தமது விடுதி காப்பாளர் மீது பொலிஸ் நிலையத்தில் புகார் அளித்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஜார்க்கண்ட் மாநிலம், குந்த்பானி பகுதியில் இயங்கிவரும் பாடசாலை விடுதியைச் சேர்ந்த மாணவிகளே விடுதியை விட்டு ரகசியமாக வெளியேறி இவ்வாறு புகார் அளித்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது " விடுதி பாதுகாவலர் தம்மைத் துன்புறுத்துவதாகவும் ,உண்ணுவதற்கு பழைய உணவுகளை வழங்குவதாகவும், கழிவறைகளை தூய்மை செய்யக் கட்டாயப்படுத்துவதாகவும், கடும் குளிரிலும் வெறும் பாய் மாத்திரமே உறங்குவதற்குத் தருவதாகவும் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்த மாணவிகளைக் கடுமையாகத் தாக்கியதாகவும், இனால் குறித்த விடுதியை விட்டு ரகசியமாக வெளியேறி பொலிஸ் நிலையத்திற்கு புகார் அளிக்க வந்ததாகவும் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் மாணவிகளின் புகாரின் அடிப்படையில் குறித்த விடுதியின் பாதுகாவலருக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆந்திரா



## உயிரை மாய்த்த வீரர்கள்; இஸ்ரோவில் பதற்றம்

ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையமான இஸ்ரோவில், பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த துணை இராணுவ வீரர்கள் இருவர், தமது உயிரை மாய்த்துக் கொண்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

சத்தீஸ்கரை சேர்ந்த சிந்தாமணி என்பவரும், உத்தரப் பிரதேசத்தைச் சேர்ந்த விகாஸ் சிங் என்பவருமே இவ்வாறு அடுத்தடுத்து தமது உயிரை மாய்த்துக்கொண்டனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களின் மரணத்திற்கு உயர் அதிகாரிகளின் பணி அழுத்தம் காரணமாக இருக்கலாம் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

புது டெல்லி

## 'ஏழை-பணக்காரர்' இடைவெளி அதிகரிப்பு



சுவிட்சர்லாந்தின் டாவோஸ் நகரில் அண்மையில் உலக பொருளாதார மன்ற வருடாந்திர கூட்டம் நடைபெற்றது.

இதில் ஆக்ஸ்பாம் இன்டர்நேஷனல் என்ற அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்தியாவின் 40 சதவீத சொத்துகள், ஒரு சதவீத பெரும் பணக்காரர்களின் கட்டுப்பாட்டில் இருப்பதாகக் கூறப்பட்டுள்ளது.

இந்நிலையில் குறித்த அறிக்கையைச் சுட்டிக்காட்டி மத்திய அரசை காங்கிரஸ் கட்சி விமர்சித்து வருகின்றது.

அந்தவகையில் இது குறித்து காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே கருத்துத் தெரிவிக்கையில் ”நாட்டின் 40% சொத்துகள், வெறும் 1 சதவீத பணக்காரர்களிடமேஉள்ளன. அதே சமயத்தில், 50 சதவீத இந்தியர்கள் ஒட்டுமொத்தமாக நாட்டின் 3% சொத்துகளைத்தான் வைத்துள்ளனர்.

குறிப்பாக மோடி ஆட்சியில் ஏழை-பணக்காரர் இடையிலான இடைவெளி அதிகரித்து விட்டது. சாமானியர்கள் தொடர்ந்து பள்ளத்திலேயே இருக்கிறார்கள்” எனத் தெரிவித்துள்ளார்.

கர்நாடகா

## ஆணுறை, கருத்தடை மாத்திரை விற்கத் தடை



பெங்களூரில் உள்ள பாடசாலையொன்றில் மாணவர்களின் பைகளில் ஆணுறை,கருத்தடை மாத்திரைகள், சிகரெட்டுகள், உள்ளிட்ட பல பொருட்கள் கைப்பற்றப்பட்டன. .

அனுமதியில்லாமல் பாடசாலைக்கு மாணவர்கள் தொலைபேசி எடுத்துவருவதாக புகார்கள் எழுந்த நிலையில், குறித்த பாடசாலை நிர்வாகத்தினர் மாணவர்களின் பைகளைப் பரிசோதித்தபோதே இது வெளிச்சத்திற்கு வந்துள்ளது.

இந்நிலையில் கர்நாடக அரசு,'18 வயதுக்கு உட்பட்ட மாணவ-மாணவிகளுக்கு மருந்து கடைகளில் ஆணுறை மற்றும் ஒயிட்னர், வலி நிவாரணி மாத்திரைகள் விற்க தடை விதிக்கும் வகையில் புதிய சட்டமொன்றை அமுல்படுத்தவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விருது நகர்

## கணவரின் விபரீத ஆசை

### உடலுறவில் உயிரிழந்த மனைவி



உடலுறவின் போது கணவருக்கு ஏற்பட்ட விபரீத ஆசையால், மனைவி பரிதாபமாக உயிரிழந்த சம்பவம் விருதுநகரில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இருவரும் மது அருந்தியுள்ளனர். பின்னர்உடலுறவில் ஈடுபட்டுள்ளனர். தனது கையில் இருந்த டோர்ச்லைட்டைஇ மனைவியின் உறுப்பில் வைத்து அழுத்தியுள்ளார் அப்போது இரத்தம் வெளியேறியதால் மனைவி மரணித்துள்ளார்.

கர்நாடகா

## புனித் ராஜ்குமாருக்குப் பிரம்மாண்ட கௌரவம்



கன்னட திரையுலகின் முன்னணி நடிகராக இருந்தவர் புனித் ராஜ்குமார். மறைந்த நடிகர் ராஜ்குமாரின் இளைய மகனான இவரை கன்னட மக்கள் பவர் ஸ்டார், அப்பு என செல்லமாக அழைத்து வந்தனர்.

இந்நிலையில் கடந்த 2021ஆம் ஆண்டு மாரடைப்பு காரணமாக புனித் ராஜ்குமார் உயிரிழந்தார். அவரது மறைவு அவரது குடும்பத்தினர், ரசிகர்கள் மட்டுமின்றி ஒட்டுமொத்த கர்நாடக மக்களையும் சோகத்தில் ஆழ்த்தியது.

இந்நிலையில் புனித் ராஜ்குமாரைக் கௌரவிக்கும் முகமாக கர்நாடக மாநிலம் பல்லாரி டவுனில் உள்ள மாவட்ட விளையாட்டு மைதானத்தில் அவரது முழு உருவ சிலையை நிறுவ அவருடைய ரசிகர்கள் முடிவு செய்துள்ளனர்.

அதன்படி புனித்ராஜ்குமாரின் 23 அடி உயர சிலையை, பிரபல ஜீவன் சிற்ப கலா குழுவை சேர்ந்த 15 சிற்பிகள் அடங்கிய குழுவினர் 3 மாதங்களாக இரவு-பகலாக வடிவமைத்தனர்.



இச்சிலையானது களி மண்ணால் வடிவமைத்து அதன் மேல் பகுதியில் இரும்பு மற்றும் வெண்கல தகடுகள் பொருத்தப்பட்டுள்ளதாகவும், இதனை வடிவமைக்க இந்திய மதிப்பில் 22 லட்சம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது

அத்துடன் இச்சிலையானது வரும் 21ஆம் திகதி பல்லாரியில் நிறுவப்படவுள்ளதாகவும், இதனை மாநில போக்குவரத்து துறை அமைச்சர் ஸ்ரீராமுலு திறந்துவைக்கவுள்ளார் எனவும் இவ்விழாவிற்கு மறைந்த நடிகர் புனித் ராஜ்குமாரின் மனைவி அஸ்வினி , சகோதரரும் நடிகருமான சிவராஜ்குமார் மற்றும் பலர் கலந்துகொள்ளவுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



பந்துவீச்சாளர்களுக்கான தரவரிசையில்

# மூன்றாமிடத்துக்கு முன்னேறிய மொஹமட் சிராஜ்

ஒருநாள் சர்வதேசப் போட்டிகளுக்கான பந்துவீச்சாளர்களுக்கான தரவரிசையில் மூன்றாமிடத்துக்கு, இந்தியாவின் வேகப்பந்துவீச்சாளரான மொஹமட் சிராஜ் முன்னேறியுள்ளார்.

இலங்கைக்கெதிரான இறுதி இரண்டு போட்டிகளிலும் ஏழு விக்கெட்டுகளைக் கைப்பற்றியதைத் தொடர்ந்தே 18ஆம் இடத்திலிருந்து 15 இடங்கள் முன்னேறி மூன்றாமிடத்தை அடைந்துள்ளார்.

முதல் 10 பந்துவீச்சாளர்களின் தரவரிசை பின்வருமாறு,

ட்ரெண்ட் போல்ட், 2. ஜொஷ் ஹேசில்வூட், 3. மொஹமட் சிராஜ், 4. மிற்செல் ஸ்டார்க், 5. ரஷீட் கான், 6. அடம் ஸாம்பா, 7. ஷகிப் அல் ஹஸன், 8. மற் ஹென்றி, 9. ஷகீன் ஷா அஃப்ரிடி, 10. முஸ்தபிசூர் ரஹ்மான்.

இதேவேளை, குறித்த இரண்டு போட்டிகளிலும் 170 ஓட்டங்களைப் பெற்ற விராட் கோலி, துடுப்பாட்டவீரர்களுக்கான தரவரிசையில் எட்டாமிடத்திலிருந்து நான்கு இடங்கள் முன்னேறி நான்காமிடத்தை அடைந்துள்ளார்.

முதல் 10 பந்துவீச்சாளர்களின் தரவரிசை பின்வருமாறு,

பாபர் அஸாம், 2. றஸி வான் டர் டுஸன், 3. குயின்டன் டி கொக், 4. விராட் கோலி, 5. டேவிட் வோணர், 6. இமாம்-உல்-ஹக், 7. கேன் வில்லியம்ஸன், 8. ஸ்டீவ் ஸ்மித், 9. ஜொனி பெயார்ஸ்டோ, 10. றோஹித் ஷர்மா.

முதல் ஐந்து சகலதுறைவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,

ஷகிப் அல் ஹஸன், 2. மொஹமட் நபி, 3. மெஹெடி ஹஸன், 4. ரஷீட் கான், 5. மிற்செல் சான்ட்னெர்.




## பார்சிலோனா செல்லும் இல்கி குன்டோகன்?

இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான மன்செஸ்டர் சிற்றியின் அணித்தலைவரான இல்கி குன்டோகனை கைச்சாத்திட ஸ்பானிய லா லிகா கழகமான பார்சிலோனா எதிர்பார்த்துள்ளது.

மத்தியகளவீரரான குன்டோகனுடனான சிற்றியின் ஒப்பந்தமானது நடப்புப் பருவகாலத்துடன் முடிவடைகின்றமை குறிப்பிடத்தக்கது.

கோப்பா இத்தாலியா தொடர்:

## வெளியேற்றப்பட்ட நாப்போலி

இத்தாலியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான விலகல் முறையிலான கோப்பா இத்தாலியா தொடரிலிருந்து நாப்போலி வெளியேற்றப்பட்டுள்ளது.

தமது மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற கிறெமொனெஸேயுடனான இறுதி 16 அணிகளுக்கான சுற்றுப் போட்டியில் பெனால்டியில் தோற்றே தொடரிலிருந்து நாப்போலி வெளியேற்றப்பட்டுள்ளது.

போட்டியின் வழமையான நேரத்தில் 2-2 என்ற கோல் கணக்கில் சமநிலையில் காணப்பட்டு, மேலதிக நேரத்திலும் கோலெதுவும் பெறப்படவில்லை.



சிம்பாப்வேக்கெதிரான டெஸ்ட் தொடருக்கான


## மேற்கிந்தியத் தீவுகளின் குழாமில் கப்ரியல்

சிம்பாப்வேக்கெதிரான டெஸ்ட் தொடருக்கான மேற்கிந்தியத் தீவுகளின் குழாமில் வேகப்பந்துவீச்சாளர் ஷனொன் கப்ரியல், சுழற்பந்துவீச்சாளர்கள் ஜோமெல் வொரிக்கான், குடகெஷ் மொட்டி ஆகியோர் மீள அழைக்கப்பட்டுள்ளனர்.



குழாம்: கிறேய்க் பிறத்வெய்ட் (அணித்தலைவர்), ஜெர்மைன் பிளக்வூட், என்குறுமஹ் பொன்னர், தங்கனரைன் சந்திரபோல், றொஸ்டன் சேஸ், ஜோஷுவா டா சில்வா, ஷனொன் கப்ரியல், ஜேஸன் ஹோல்டர், அல்ஸாரி ஜோசப், கைல் மேயர்ஸ், குடகெஷ் மோட்டி, றேமன் றீஃபயர், கேமார் றோச், டெவொன் தோமஸ், ஜோமெல் வொரிக்கான்.

## யுனைட்டெட்டிலிருந்து விலகும் ஹரி மக்குவாயா?



இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான மன்செஸ்டர் யுனைட்டெட்டின் அணித்தலைவரான ஹரி மக்குவாயாவை கடனடிப்படையில் கைச்சாத்திட இன்னொரு பிறீமியர் லீக் கழகமான வெஸ்ட் ஹாம் யுனைட்டெட் எதிர்பார்த்துள்ளதாகக் கூறப்படுகிறது.

பின்களவீரரான மக்குவாயாவுக்கான வாய்ப்புகள் யுனைட்டெட்டில் அரிதாகவே அண்மைய காலத்தில் காணப்பட்டிருந்தன.

உக்ரேன்

பாலர் பாடசாலை மீது விழுந்த ஹெலிகொப்டர்;

# 16 பேர் உயிரழப்பு



உக்ரேனின் கீவ் நகரில் உள்ள பாலர் பாடசாலையொன்றின் மீது நேற்றைய தினம் (18) ஹெலிகொப்டர் ஒன்று விழுந்து விபத்துக்குள்ளானதில் 16 பேர் உயிரிழந்துள்ளனர்.

அந்நாட்டின் உட்துறை அமைச்சரான டெனிஸ் மொனாஸ்டிர்ஸ்கி பயணித்த ஹெலிகொப்டரே, கட்டுப்பாட்டை இழந்து இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விபத்தில், உட்துறை அமைச்சர், உட்துறை இணை அமைச்சர், அமைச்சக அதிகாரிகள், பாடசாலைச் சிறுவர்கள் உட்பட மொத்தமாக 16 உயிரிழந்துள்ளனர் எனவும், பலர் படுகாயங்களுக்குள்ளான நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீனா

## வீழ்ச்சியைச் சந்திக்கும் சீனா; அதிர்ச்சியில் உலக நாடுகள்



சீனாவில் கடந்த 1961ஆம் ஆண்டிற்குப் பின்னர் முதல் முறையாக மக்கள் தொகை குறைவடைந்துள்ளதாக அந்நாட்டின் தேசிய புள்ளியல் துறை தெரிவித்துள்ளது.

இது குறித்து வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், சீனாவில் கடந்த 2021ஆம் ஆண்டில் இருந்ததை விட 2022ஆம் ஆண்டில் 8,50,000 பேர் குறைவாகவுள்ளனர் எனவும், மக்களிடம் அதிகரித்துள்ள கல்வியறிவால் "ஒரு குழந்தை" என்ற திட்டத்திற்கு நல்ல பலன் கிடைத்துள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் தற்போது, சீனாவில் 141 கோடியே 17 லட்சம் மக்கள் உள்ளனர் எனவும், இந்தியா 2022ஆம் ஆண்டிலேயே 141 கோடியே 20 லட்சம் என்ற எண்ணிக்கையை எட்டியிருக்கும் எனவும் ஐ.நா தெரிவித்துள்ளது.

இந்தியாவில் 10 ஆண்டுகளுக்கு ஒருமுறை மட்டுமே மக்கள் தொகை கணக்கெடுக்கப்படும் என்பதால், 2022ஆம் ஆண்டிற்கான புள்ளி விபரம் கிடைக்கவில்லையெனவும் ஐ.நா தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.




அமெரிக்கா

## மைக்ரோசொப்ட் அதிரடி: அதிர்ச்சியில் ஊழியர்கள்

அண்மைக்காலமாக வருவாயை அதிகரிக்கும் நோக்கில் உலகின் முன்னணி நிறுவனங்களான டுவிட்டர், மெட்டா, அமேசான், கூகுல் ஆகிய நிறுவனங்கள் தங்களது ஊழியர்களைப் பணிநீக்கம் செய்து வருகின்றன.

அந்த வரிசையில் தற்போது பிரபல மென்பொருள் நிறுவனமான மைக்ரோசொப்டும் இணைந்துள்ளது.

மைக்ரோசாப்ட் நிறுவனமானது அதன் ஊழியர்களில் 5 சதவீதமானோரை, அதாவது சுமார் 11,000 ஊழியர்களை நேற்றைய தினம் பணிநீக்கம் செய்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

மைக்ரோசொப்ட், கூகுள், மெட்டா ஆகிய நிறுவனங்கள் அடுத்தடுத்து இவ்வாறான ஆட்குறைப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதால், தொழில்நுட்பத் துறையில் பணிபுரிபவர்கள் கலக்கமடைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரித்தானியா

## டபுள் டக்கர் பஸ் கவிழ்ந்து விபத்து



பிரித்தானியாவில் கன்னிங்டன் நெடுஞ்சாலையில் நேற்று முன்தினம் சுமார் 70 பேர் பயணித்த டபுள் டக்கர் பஸ்ஸொன்று வேகக் கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளானது.

இதனையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார், காயமடைந்தவர்களை மீட்டு வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜேர்மனி



## கிரேட்டா துன்பர்க் கைது

ஜேர்மனியில் சுரங்க விரிவாக்கத்துக்கு எதிராகப் போராட்டம் நடத்திய பருவநிலை ஆர்வலரான 'கிரேட்டா துன்பர்க்', அந்நாட்டுப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

20 வயதான கிரேட்டா கார்ஜ்வெய்லர் சுரங்கத்தின் விரிவாக்கத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்றைய தினம் போராட்டத்தில் ஈடுபட்டார்.

இந்நிலையில் கிரேட்டா துன்பர்க் மற்றும் போராட்டக்காரர்கள் சுரங்கத்தின் ஆபத்தான இடத்தில் நின்று போராட்டம் நடத்துவதாகக் கூறிய பொலிஸார் அவர்களைக் கைது செய்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரான்ஸ்

## லூஸில் ராண்டன் காலமானார்

உலகின் மிகவும் வயதான கன்னியாஸ்திரியாக கின்னஸ் சாதனைபடைத்த பிரான்ஸைச் சேர்ந்த லூஸில் ராண்டன் (Lucile Randon) தனது 118 ஆவது வயதில் நேற்று முன்தினம்(17 ) காலமானார்.

1904ஆம் ஆண்டு பிறந்த இவர் தனது 41ஆவது வயதில் கன்னியாஸ்திரியாக முடிவெடுத்தார் எனவும் அதன் பின்னர் ஒரு மருத்துவமனையில் 31 ஆண்டுகள் பணிபுரிந்தார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் கடந்த 2021ஆம் ஆண்டு COVID-19 நோய்த்தொற்றால் பாதிக்கப்பட்டு உயிர்பிழைத்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் அவர் டூலோன் (Toulon) நகரில் உள்ள தாதிமை இல்லத்தில் உறக்கத்தில் உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.





விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை 18 ஜனவரி 2023, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.